# “சே குவேரா புரட்சிவாதிகள்” 19 பேர் கைது

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 12

இதழ்: 78

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 17 ஸபர் 23 வியாழக்கிழமை [30-4-70]

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

## ஒருவரிடம் சுழல் துப்பாக்கி இருந்ததாக பொலிஸ் தகவல்;

### சில தஸ்தாவேஜுக்களும் கண்டுபிடிப்பு

கொழும்பு, புதன்

“சே குவேரா” என்ற புரட்சிவாதியின் பெயரில் இயங்கும் வன்முறையில் நம்பிக்கையுடைய தீவிரவாத இளைஞர் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் மேலும் பதினெட்டு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஏற்கனவே ஒருவர் இப்படியான சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

புரட்சிவாதிகள் சம்பந்தப்பட்ட சில முக்கிய தஸ்தாவேஜுக்களும் கேகாலையில் வைத்து இரகசிய பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரிடம் சுழல் துப்பாக்கி ஒன்று இருந்ததாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

‘சேகுவேரா’ குழு என்ற பெயரில் வன்முறையில் நம்பிக்கை உடைய தீவிரவாத இளைஞர் கோஷ்டி ஒன்று நாட்டில் இரத்தக் களறியை ஏற்படுத்தி குழப்ப நிலையை உண்டுபண்ணி மே 27-ந் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலைத் தடைசெய்யத் திட்டம் தீட்டியுள்ளனர் என்று எதிர்க்கட்சியினருக்கும் அரசாங்கக் கட்சியினருக்கும் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் பொலிசார் தீவிர புலன் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தப் புலன் விசாரணை மூலமாகத்தான் மேல் குறிப்பிட்ட 19பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக வடமாகாணத்திலும் விசாரணை நடைபெற்று சந்தேகத்திற்கு இடமான நபர் எனக் கருதப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இராணுவ வீரர் ஒருவரும் வடமாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

சில மாதங்களுக்கு முன்பு பொலிவியா நாட்டில் கொலை செய்யப்பட்ட உலகப் பிரசித்திபெற்ற புரட்சிவாதியின் பெயர்தான் சே குவேரா. இவர், கியூபா நாட்டுத் தலைவரான பிடெல் கஸ்ட்ரோவுடன் சேர்ந்து, கொரில்லா முறையில் ஆயுதந்தாங்கி, சர்வாதிகாரி படிஸ்டாவுக்கு எதிராகப் போராடி, அந்நாட்டில் சோஷலிஸ ஆட்சி ஏற்படக் காரணமாயிருந்தவர். அவர் பெயரில் இலங்கையில்உள்ள இந்தப் புரட்சிவாத இளைஞர் குழுவும் இயங்குவதாகத்தான் பொலிசார் கூறுகின்றனர்:

இரகசிய பொலிசார் நாடு பூராவும் இதுசம்பந்தமான புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (சி.பி.ஏ.)

# புதிய ஆட்சிவந்த பின்னரே பல்கலைக்கழகம் பற்றி முடிவு

## தமிழரசாரின் ஆட்சேபம்

## உயர்கல்விச்சபைதீர்மானம்

கொழும்பு,புதன்

வடக்குமாகாணத்திலா கிழக்குமாகாணத்திலா புதியதொரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்பதுபற்றி ஆராய்ந்த தேசியஉயர் கல்விச்சபையின் உபகுழு தனது இறுதிமுடிவை ஒத்திவைத்திருக்கிறது. அடுத்தமாதம் 27ம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரே பல்கலைக்கழகம் எங்கு அமைக்கப்பட வேண்டுமென்ற தமது சிபார்சை தேசிய உயர் கல்விச்சபை கல்வியமைச்சரிடம் தெரிவுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவு மிக முக்கியமானதென்றும் இந்த முக்கிய பிரச்னையில் காபந்து அரசாங்கம் ஒரு முடிவும் செய்யக் கூடாது என்றும் தமிழரசுக் கட்சியினர் ஆட்சேபித்தனர். பல்கலைக் கழகம் [illegible]

மட்டக்களப்பு ஆகிய இடங்க[illegible] அதன் இதரபீடங்க[illegible]மைய வேண்டுமென்பது [illegible]ரசுக் கட்சியின் கோரிக்கை.

யாழ்ப்பாணத்தில் தான் புதிய பல்கலைக்கழகம் அமைய வேண்டு[illegible]து தமிழ்க்காங்கிரசின் கோரிக்கை.

## ‘உரிமை பெற்றவர்கள்

## தபால் சேவகரை அடித்துக் கொன்றனராம்

### நெடுந்தீவில் சம்பவம்

அல்லைப்பிட்டி, புதன்

நெடுந்தீவு ஐந்தாம் வட்டார வாசியும், தபால்சேவகருமான கணபதி சின்னத்தம்பி என்பவர் தபால் விநியோகிக்கச் சென்றசமயம் வீதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக பதில்நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் நெடுந்தீவிற்குச் சென்று ஸ்தல விசாரணை நடாத்தினர். உத்தியோக உடையுடனும். தபால் கட்டுக்களுடனும் தலை சிதறிய நிலையில் சடலம் அலங்கோலமாக வீதியில் கிடக்கக் காணப்பட்டது.

இதுசம்பந்தமாகக் காலஞ்சென்றவரின் மகனொருவர் சாட்சியமளிக்கும்போது தமது தகப்பன் தபால்விநியோகிக்கச் சென்றசமயம் சந்தேக நபர்கள் அவரைக் கற்களால் எறிந்தும் பின் தடிகளினல் அடித்தும் கொலைசெய்ததாகவும் தாம் இதனைக்கண்டு பயந்து ஓடிவிட்டதாகவும் தெரிவித்தார்.

இக்கொலை சம்பந்தமாக பசுபதி கைலாசநாதன், தர்மலிங்கம் காசிநாதன், கனகசபை தர்மராசா, ஆறுமுகம் சோமசுந்தரம் ஆகிய நால்வரையும் கைதுசெய்யும்படி நீதவான் உத்தரவிட்டு மேல்விசாரணையை மேமாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மணவிலைக் கடத்தினராம்

## 7 எதிரிகளும் ரூ. 2500

## ‘ஒருசில முதலாளிகளை சூறையாட விடலாமா?’

### — ஞானசீகதேரோ

காலி, புதன்

அமெரிக்கர்களால் உதவி செய்யப்பட்ட முதலாளி வர்க்கத்தினருக்கும் பொருளற்ற வறியமக்களுக்குமிடையேயுள்ள போட்டியே இததேர்தலாகும்.

பத்தேகமவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய வணஹென்பிற்ற கெதர ஞானசீக தேரோமேற்கண்டவாறு குறிப்பிட்டார்

பத்தேகம ல. ச. ச. கட்சி வேட்பாளர் திரு. நீல், டீ. அல்விசை ஆதரித்து நடைபெற்ற இக்கூட்டத்தில் வண ஞானசீக தேரோ மேலும் தொடர்ந்து பேசுகையில், அமெரிக்கா ஐ. தே. கட்சிக்கு உதவி செய்கிறது அதன் ஆலோசனையின் பேரிலேயே செயல்படுகிறது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் திரும்பவும் ஐ.தே. கட்சி பதவிக்கு வந்தால் இதுவே இந்நாட்டின் கடைசித் தேர்தலாகவிருக்கும். எங்களது தற்போதைய பொருளாதார முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒருசில முதலாளித்துவவர்க்கத்தினரை இந்நாட்டைச் சூறையாட நாம் விடலாமா? பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டமைந்தவை மார்க்சிய கொள்கைகள் முதலாளித்துவத்துக்கும் ஏகபோகவுரிமைக்கும் பௌத்தம் முழுமாறுனதாகும். சிங்கள மொழிக்கும் பௌத்தத்துக்கும் இதுவரை தேசிய அரசாங்கத்தினர் ஒன்றும் செய்யாது ஜனநாயகம் பற்றி வெறும்பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் மதுபானம் வடித்தல் பௌத்தமதக்கொள்கைக்கு மாறுன செயலாகும். ஆனல் இன்றுவேலையில்லாப் பிரச்சினையால் சிலர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர் இவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்வரை இத்தொழிலை விடுமாறு வற்புறுத்தவியலாது. பௌத்த வாக்காளர்கள் வேறுபாடுகளை மறந்து கூட்டணியினருக்கு வாக்களிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

— —

## அமெரிக்க இசைவல்லுனர் இலங்கை விஜயம்

கோட்டை, புதன்

அமெரிக்கபிரபலபியானோ வல்லுனரான திரு. வேகன் மேமாதம் 3-ம் திகதி கொழும்புக்கு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுசம்பந்தமாகக் காலஞ் சென்றவரின் மகனொருவர் ... மேமாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

...பது சம்பந்தமாக எடுககப் படும் முடிவு மிக முக்கிய மானதென்றும் இந்த முக்கிய ... சாங்கம் ஒரு முடிவும் செய்யக் கூடாது என்றும் தமிழரசுக் கட்சியினர் ஆட்சேபித்தனர். பல்கலைக் கழகம் அமைப்பதுபற்றி தேசிய உயர் கல்விச் சபை இறுதி முடிவு செய்யாததற்கு இதுவே தான் முக்கிய காரணமென்று கூறப்படுகிறது.

திருக்கோணமலையில்புதிய பல்கலைக் கழகத்தின் தலைமைப் பீடம் அமைய வேண்டுமென்பதும் யாழ்ப்பாணம் ...களின் அதன் இதரபீடங்கள் அமைய வேண்டுமென்பதும் தமிழரசுக் கட்சியின் கோரிக்கை.

புதிய பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்பது தமிழ்க்காங்கிரசின் கோரிக்கை.

...யின் பெயர்தான் சே குவேரா. இவர், கியூபா நாட்டுத் தலைவரான பிடெல் ... கொரில்லா முறையில் ஆயுதந்தாங்கி, சர்வாதிகாரி படிஸ்டாவுக்கு எதிராகப் போராடி, அந்நாட்டில் ... விருக்கும். எங்களது தற்போதைய பொருளாதார முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒருசில முதலாளித்துவவர்க்கத்தினரை இந்நாட்டைச் சூறையாட நாம் விடலாமா? பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக்

மாணவியைக் கடத்தியோர்

# 7 எதிரிகளும் ரூ. 2500 பிணையில் சென்றனர்

வல்வெட்டித்துறை, புதன்

இம்மாதம் 10-ம் திகதி கல்லூரியிலிருந்து வீடு திரும்பிய 17 வயது யுவதியை வழியில் வைத்துக் காரில் கடத்தியதாகக் கைதுசெய்யப்பட்ட உடுப்பிட்டியைச் சேர்ந்த இ. தர்மலிங்கம், கே. சின்னையா கே. அரசரத்தினம், ஆர். நவரத்தினராசா, ஆர். தியாகலிங்கம், கே. குணரத்தினம், கே. இளையதம்பி ஆகிய ஏழு பேரும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா முன் ஆஜர்செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரிகளை தலா ரூபா 2500 பிணையில் செல்லுமாறும் மீண்டும் அடுத்த மாதம் 10-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. கே. மோதிலால் நேரு ஆஜரானார்.

# "ஈழநாடு" பாலைதீவு நிவாரணநிதி இன்றுடன் முடிவடைகிறது

பாலைதீவு நிவாரணத்திற்கு நிதி உதவ விரும்புவோர் இம்மாதத்துக்குள் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

30-4-70 உடன் நிதி பெறுவது நிறுத்தப்பெறும். யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் தலைமையில் 'ஈழநாடு' நிவாரண சபையினர் கூடி இப்பணத்தைத் தக்கபடி விநியோகிக்கத் தீர்மானிப்பர்.

எமது வேண்டுகோளை ஏற்று நிதியுதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 10,732-07 |
| க. துரையப்பா உடையார் வளவு வண்ணார் பண்ணை | 2-00 |
| த. தர்மகுலசிங்கம் கைதடி வடக்கு | 1-00 |

யாழ்ப்பாணம் தேர்தல் அலுவலக ஊழியர்கள் மூலம் சேர்க்கப்பட்ட நிதி ரூபா145-00. பெயர் விபரம்

| | |
|---|---|
| திரு. எஸ். கந்தசாமி | 10-00 |
| ,, ஏ. வைத்தியநாதர் | 5-00 |
| ,, எஸ். பாலசிங்கம் | 5-00 |
| ,, எஸ். ஏ. இராசாா | 5-00 |
| ,, ஐ. யாதவராஜன் | 20-00 |
| ,, வி. இராஜரத்தினம் | 10-00 |
| ,, சோ. நடராஜசர்மா | 10-00 |
| ,, கே. தம்பிஐயா | 5-00 |
| ,, டீ. எச். ரத்தினுயக்கா | 5-00 |
| ,, வி. தம்பாபிள்ளை | 5-00 |
| ,, சே. கனகசபாபதி | 3-00 |
| ,, கிருஷ்ணபிள்ளை | 5-00 |
| ,, வே. குமாரசாமி | 3-00 |
| ,, ஆ. இரத்தினசிங்கம் | 3-00 |
| ,, எஸ். வேலுப்பிள்ளை | 5-00 |
| ,, இராசரத்தினம் | 5-00 |
| ,, எஸ். கணேசபாலன் | 5-00 |
| ,, எஸ். முத்துராச | 5-00 |
| ,, எஸ். கணேசு | 5-00 |
| ,, எஸ். தேவராஜன் | 5-00 |
| ,, கே. சுப்பிமணியம் | 2-00 |
| ,, செ. சிவப்பிரகாசம் | 2-00 |
| செல்வி ஏ. சின்னத்துரை | 2-00 |
| ,, பீ. பொன்னையா | 5-00 |
| ,, கே. நடேசு | 5-00 |
| ,, சரோஜினி அருளானந்தம் | 5-00 |



## குருபூசை

இலக்கண சுவாமிகள் என்றழைக்கப்படும்ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகளின் குருபூசை இன்று சிதம்பரத்திலும் ஈழநாட்டிலும் கொண்டாடப்பெறுகிறது.

# பொலிஸ் நிலையம் அமைக்க முயற்சி

முசலி, புதன்

தேர்தல் காலம் நெருங்கி வருவதாலும், அடிக்கடி குற்றங்கள், கொலைகள் ஏற்படுவதாலும் முருங்கன் புகையிரத ஸ்தானத்துக்கண்மையில் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியை முசலிக்காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் நிலையத்தை விரைவில் அமைப்பதற்கு மன்னார் மாவட்ட உதவிப்பொலிஸ் அதிபர் திரு. எம். ஈ. பி. எல். பெரேராவின் ஒத்துழைப்பை அவர் வேண்டியுள்ளார்.

# 'உரிமை பெற்றவர்கள் ஏன் விலகினார்கள்?'

மாவிட்டபுரம், புதன்

"யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் திறுவப்பட வேண்டுமானால் எமது கட்சியை அனுப்புங்கள்."

இவ்வாறு தெல்லிப்பழை சந்திக்கருகாமையில் நேற்றிரவு நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் கூறினார்.

காங்கிரஸ் வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரிக்குமுகமாக திரு. நா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜி. ஜி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழரசார் இலங்கையை இரு கூறாகப் பிரித்து வடக்கைத்தென் ...ந்தியாவுடன் இணைக்க முயல்கின்றனர் என சிங்களவர் நினைக்கிறார்கள்.

அண்ணா என்று கூறுகிறார்கள். அண்ணா பதவிக்கு வந்ததும் திராவிட நாடு பிரிவினை கோரிக்கையை முற்றாகக்கைவிட்டார். இதேபோலதான்த் தமிழரசும்.

தமிழரசார் 65-ம் ஆண்டு தேர்தலின் பின் யு. என். பியில் சேர்ந்து உரிமை பெற்றோம் என்கிறார்கள், உரிமை பெற்றால் ஏன் 5 வருடமும் சேர்ந்திருக்காது இடையில் வெளியேறினார்கள். யு. என். பியும் வருகிற முறை தமிழரசாரை ஆதரிக்க மாட்டாது.

தமிழரசாரை 3 முறை அனுப்பினீர்கள். எம்மை ஒரு முறை பலத்துடன் அனுப்பினால் 2 1/2 வருடத்தில் உரிமைகள் பெற்று தருவோம்.

காங்கேசன்துறை வேட்பாளர் திரு. ரி. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது;

திரு. ஜி. ஜி. மந்திரியாகஇருந்தபோது வடக்கில்தொழில் நிறுவனங்களை ஆரம்பித்து வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்கினார். அதே போல இம்முறை எமது கட்சியை அனுப்பினால் நாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைநீக்க முயல்வோம்.

மற்றும் பலர் உரையாற்றினர்.

# சாத்வீகம் மூலம் மீண்டும் ஒப்பந்தம் செய்யவைப்போம்

—வி. தர்மலிங்கம்

உடுவில், புதன்

"இழந்த எமது உரிமைகளை பெறுவதற்கு நாம் நடாத்திய இடைவிடாத போராட்டங்களும் இயக்கங்களும் தான் இலங்கையில் இன்று தமிழினம் ஓரளவேனும் பாதுகாக்கப்பட்டுள்ளதற்கு முக்கிய காரணம். காந்தியடிகள் வெள்ளையர்களுக்கெதிராக நடாத்திய சாத்வீகப்போராட்டம்தான் பாரதநாடு விடுதலையடைய வழிசெய்தது. அதுபோலவே ஈழத்தமிழினம் விடுதலை பெறவேண்டுமானால் சாத்வீகப் போராட்டமே அதற்கு வழி. எமது போராட்டங்களை கண்டு பயந்த காரணத்தாலேயே காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா எம்முடன் 1956-ல் ஒப்பந்தம் செய்ய நேர்ந்தது. மீண்டும் சாத்வீகப் போராட்டம் நடத்தி பண்டாரநாயகாவுக்கு ஏற்படுத்திய நிலையை ஆட்சியாளருக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தி ஒப்பந்தம் செய்யவைப்போம்."

தமிழரசுக் கட்சி உடுவில் தொகுதி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கத்தை ஆதரித்து உடுவிலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு எஸ். முத்துலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. எஸ். முத்துலிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

சிங்கள இனத்தவர்கள் தமிழர்களை என்றும் அடிமைகளாகவே நடாத்த எண்ணியுள்ளனர். அடிமைகளாக்கப்பட்டவர்கள் என்றும் அடிமைகளாக வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை. தமிழர்களின் வேதனை தமிழ்தாயின் கண்ணீர் நிச்சயம் தமிழினத்தை விடுதலையடையசெய்யாமல்போகாது.

பல்கலைக்கழக

## பரீட்சை முடிவு திகதி

கோட்டை, புதன்

இலங்கைப் பல்கலைக் கழக வருடாந்தப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 15-ம் திகதி வெள்ளிக்கிழமையாகும். இவ்வறிவித்தலைப் பல்கலைக் கழக உதவி காரியதரிசி திரு. எம். டி. ஜி. அபரத்ன தெரிவித்துள்ளார். இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை மேமாதம் 1-ந் திகதியிலிருந்து 10-ம் திகதி வரை பரீட்சை இலாக்காரியாலயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

# மேதினக் கொண்டாட்டங்கள்; பொலிசார் தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், வியா

இம்முறை கொண்டாடப்படும் மேதினம் பொதுத் தேர்தலையொட்டி வருவதால் அதன் முக்கியத்துவம் அதிகமானதாகக் காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் மேதினத்தில் தமது தொழிலாளர் வர்க்கத்தினரின் பலத்தை வெளிக்காட்டும் வகையில் பிரமாண்டமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள்.

மேதினத்தை காரணமாக வைத்துக் கொண்டு சே குவேரா இயக்கத்தினர் அசம்பாவிதத்தைஏற்படுத்தலாம் எனக் கருதுவதால் பொலிசார் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேதினத்தில் இடம் பெறும் ஊர்வலத்தில் எவ்வித அரசியல் சார்பான கோஷங்களும் சுலோக அட்டைகளும் இடம்பெற அனுமதி வழங்கப்பட மாட்டாது என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊர்வலத்தில் இடம் பெறும் மோட்டார் வாகனங்களில் மோட்டார் சட்டத்தை மீறி பிரயாணம் செய்வோர்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிசார் எச்சரித்துள்ளனர்.

## கீரிமலையில் மாஸ்கோ கம்யூனிஸ்டுகள்

யாழ்ப்பாணம், புதன்

இம்முறை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும் லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தினதும் வடபிரதேசக் கிளையின் மேதினவிழா மே முதலாம் திகதி மாலை 6 மணியளவில் திரு. இ. நரசிங்கம் தலைமையில் கீரிமலைக் கடற்கரை மைதானத்தில் நடைபெறும்.

ஊர்வலம் பலாலி அம்மன் கோவிலடியிலிருந்து மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை கடற்கரை வழியாக கூட்ட மைதானத்தை யடையும். வ பொன்னம்பலம் (காங்கேசன்துறை வேட்பாளர்), எம். சி. சுப்பிரமணியம், சி. நடராசா, பொ. நாகலிங்கம், டாக்டர் அல்பிறட் திரு. எஸ். இராசா மற்றும் பலர் உரைநிகழ்த்துவார்கள்.

## ...இலங்கை விஜயம்

...புதன்

அமெரிக்கபிரபலபியானோ வல்லுனரான திரு. வேகன் மேமாதம் 3-ம் திகதி கொழும்புக்கு வருகிறார்.

## "இலட்சியமே என் மூச்சு"

அல்லைப்பிட்டி, புதன்

"தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போவது எதிர்வரும் பொதுத்தேர்தல். நான் உண்மையான தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் அயராது பாடுபட்டுவருவேன். நான் தமிழரசுக் கடசிவிட்ட பிழையைத் திருத்தாமல் அக்கட்சியில் இருந்தால், ஒரு கஷ்டமும் இன்றிஆடசிமன்றம் செல்ல முடிந்திருக்கும்."

மேற்கண்டவாறு தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் வேலணை அம்மன்கோவிலடியில் நடைபெற்ற பிரசாரக் கூடடமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். திரு. தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

நான் தமிழ் மக்களுக்குத் தீங்குவரும் சட்டங்களை ஒரே மூச்சில் எதிர்த்தபடியினால் தமிழரசுக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ளேன். நான் ஓர் இலட்சியத்துக்காகப் போராடவே உங்கள் முன் வந்துள்ளேன். பதவி ஆசை பிடித்து உங்கள் முன் வரவில்லை.

நான் தீவுப்பகுதிக்குச் சேவைகள் செய்யாதவன் என்று மாற்றுக்கட்சியினரும் சுயேச்சைவாதிகளும் கூறிவருகின்றார்கள். ஆனால் வேறெந்தத் தொகுதிகளிலும் பார்க்க தீவுத்தொகுதி பல வழிகளிலும்முன்னேற்றமடைந்துள்ளது. இதுவே என்சேவைககு எடுத்துக் காட்டாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அறிவித்தல்
திருகோணமலை மாவட்ட
கள்ளுத்தவறணை
விற்பனவு - 1970|71

என் 1619- திருகோணமலை மாவட்டத்திலுள்ள கள்ளுத்தவறணைகளில் 1-7-70 தொடக்கம் 30-6-71 வரை கள்ளு விற்கும் உரிமை 19-5-70-ல் விற்கப்படும்.

இதன் மேலதிக விபரங்களுக்கு 30-4-70-ம் திகதியைக்கொண்ட அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

சோமபால குணதீர
திருகோணமலை மாவட்ட
அரசாங்க அதிபர்

18-4-70.

GP 2671



## வரி விளம்பரம்

### தேவை

ஆசிரியர்

ஆங்கில மூலம் சுருக்கெழுத்து கணக்கியல் போதிக்கக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். 278, கணக்கியல் கல்லூரி, (சிவன் கோவில் சந்தி), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2085

### விற்பனைக்கு

கிழக்குக் கோண்டாவில் சந்திக்கும், விவசாயப் பாடசாலைக்குமிடையில், பெனியன் கம்பனிக்கு அண்மையில் 131/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு வீடுகட்டவும், தொழிற்சாலை அமைக்கவும் வசதியான இடம். சகல வசதிகளுமுள்ள இடம் பங்கிட்டும் கொடுக்கப்படும். தொடர்புகொள்க: எம். குணரத்தினம், ஆசிரியர், கோண்டாவில் கிழக்கு. 2067

யாழ்ப்பாணம் பெரிய கடை காங்கேசன்துறை வீதியிலுள்ள 67/1 இலக்கக் கட்டிடம் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். ரி. கதிர்காமத்தம்பி, செட்டித் தெரு, பருத்தித்துறை. 2084

### கல்வி

யாழ்ப்பாணக் கல்விநிலையம் G. C. E. சாதாரண உயர்தர வகுப்புக்கள் 2-5-70 இல் ஆரம்பமாகும் Organic practicals 4-5-70இல் ஆரம்பமாகும். 304/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 2083

வியாபாரம்பெருக
விளம்பரஞ்செய்க


மாகாண கிரிக்கெட் போட்டியில்

# கொழும்பு தெற்குக் கோஷ்டி வடமாகாணத்தை வென்றது

## பிரேமச்சந்திரனின் சிறப்பான பந்துவீச்சு

யாழ்ப்பாணம், வியா

வடமாகாண 18 வயதுக்குட்பட்டவர்கள் பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், கொழும்பு தெற்கு 18 வயதுக்குட்பட்டவர்கள் பாடசாலைதெரிவு கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் கடந்த இருநாட்களாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாகாணங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் கொழும்பு தெற்குக்கோஷ்டி வெற்றி பெற்றது.

முதலில் வடமாகாணக் கோஷ்டியே துடுப்பெடுத்தாடியது. இக்கோஷ்டிமிகக் கூடுதலான நிமிடங்கள் துடுப்பெடுத்தாடி ஆக 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றது இதில்எச்அல்போன்ராஜ ஸ்டீ. ஆர். ராஜகாந்தனும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 45, 35 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் ஏ. விபுலானந்தன், ஜே. கே. பிரேமச்சந்திரன் ஆகியோரும் 15, 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொழும்புக் கோஷ்டியின் பந்து வீச்சு வீரர் ஏ. மெண்டிஸ் சாதுரியமாக பந்துவீசி 49 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர். மற்றும் எஸ். எஸ். ஜி. லோட்டன், என். முனசிங்கா ஆகியோர் முறையே 3, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கொழும்புக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடத் தொடங்கி முதல் நாள் போட்டி முடியும் போது 75ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்துவிட்டது. மறுநாள் இக்கோஷ்டியினர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும் போது ஏ. டி. ஏச். சமரநாயக்காவும், எஸ். சமரரட்ணவும் சோடிசேர்ந்து ஆடி மிக வேகமாக ஓட்டங்களைப் பெற்றனர். இவர்கள் இருவரும் ஆட்டமிழக்கும் போது முறையே 77, 44 ஓட்டங்களைப் பெற்றனர் மற்றைய வீரர்களான எஸ் அமரசிங்காவும், ஏ. மெண்டிஸாம் 17, 17 ஓட்டங்கப் பெற்றனர். இக் கோஷ்டி மொத்தம் 219 ஓட்டங்களைப் பெற்றது.

வடமாகாணக் கோஷ்டியின் பந்து வீச்சு வீரர் ஜே. கே. பிரேமச்சந்திரனின் பந்து வீச்சு மிகவும் சிறப்பாகக் காணப்பட்டது. இவர் தொடர்ந்து 22 ஓவர்கள் பந்துவீசி 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். மற்றைய வீரர்களான ஏ. விபுலானந்தனும், ரி. மகேந்திரனும் 3, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில், வடமாகாணக் கோஷ்டி வீரர்களின் பந்து தடுப்பு பார்ப்பதற்கு மிகவும் தரக்குன்றியதாகவே இருந்தது. இவர்களின் கவலையீனமான பந்து தடுப்பினல், எதிர்க் கோஷ்டியினர் மிக சுலபமாக பல ஓட்டங்களைச் சேகரித்துக் கொண்டனர்.

வடமாகாணக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட ஆரம்பித்தும்அடுத்தடுத்துதமது விக்கெட்டுகளை இழக்க ஆரம்பித்தது. இக்கோஷ்டி 9 விக்கெட்டுகளை இழந்தபோது ஆக 79 ஓட்டங்களை மட்டுமே பெற்றது இதன்பின் துடுப்பெடுத்தாடியரி. மகேந்திரனும், ஆர். நரேந்திரனும் மிகவும் நிதானமாக துடுப் பெடுத்தாடி தமது கோஷ்டியின் ஓட்டங்களின் எண்ணிக்கையை 102 ஆக உயர்த்தினர். மகேந்திரன் ஆட்டம் இழந்தார்.

ஏ. மெண்டிஸ் 22 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளையும், எஸ். எஸ் ஜி லோட்டன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

கொழும்புக் கோஷ்டி இப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு 46 ஓட்டங்களை பெற வேண்டியிருந்தது. இந்த ஓட்டங்களை இக்கோஷ்டியினன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான எஸ் சமரசிங்காவும், என் முனசிங்காவும் ஆட்டமிழக்காது முறையே 29, 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆட்டமுடிவில் கொழும்பு தெற்குக் கோஷ்டி 10 அதிகப்படியான விக்கெட்டுகளால் வடமாகாணக் கோஷ்டியை தோற்கடித்தது. (தே நி)

ஆட்சிமன்றத்துக்கு

# 'பொம்மைகளைப்போல சென்று வந்தனர்'

உடுவில், புதன்

'தமிழ் மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்றுள்ள இரு தமிழ்ப் பெருங்கட்சிகளும் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தமிழ் இனத்திற்கு எதுவித நன்மைகளையும் பெற்றுத் தரவில்லை எமது பிரதிநிதிகள் வெறும் பொம்மைகள்போலப் பாராளுமன்றம் சென்று வந்தனரேதவிர தமிழ்மக்களின் மொழிக்கு, இனத்துக்கு உரிமைபெற்றுத்தரவில்லை.

உடுவில் தொகுதியின் சுயேச்சை வேட்பாளர் திரு. குமாரசாமி விஞ்ஞதன் உடுவில் டச்சு ரோட்டில் தமது காரியாலயம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

'தமிழ் காங்கிரஸ் கட்சியினர் கிழக்குமாகாணத் தமிழ் மக்களை கைவிட்டு விட்டனர். தலைவருக்குச் சுகயீனமே அதனால் பிரசாரம் செய்ய முடியவில்லை. எனவே அக் கட்சி போட்டியிடவில்லை என்று கூறப்படுகிறது. ஒரு தலைவருக்காக அத்தனை தமிழ் மக்களும் கைவிடப் படுவதா? தமிழ் காங்கிரஸ் காரர் திருமலையில் போட்டியிடாததற்கு மூலகாரணம் பல்கலைக்கழக விவகாரமே. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் [illegible] எந்த முகத்தோடு கிழக்குமாகாணத் தமிழர்முகத்தில் விழிப்பார்கள். அதனால்தான் அவர்கள் அங்கு [illegible] வில்லை.

# 'தகா தனது விதியை விரைவில் அறிவார்'

— அபயகுணவர்த்தன

காலி, புதன்

''ஸ்ரீலங்கா, லங்கா சமசமாஜ, பொதுவுடைமைக் கட்சிகள், ஐக்கியதேசியக் கட்சி அங்கத்தவர்கள், காலியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் எனக்கே வாக்களிப்பர். எனது உற்ற நண்பர் கலாநிதி டபிள்யூ. தஹநாயக்கா பெருந் தோல்வியையே எதிர்பார்ப்பார். ஆகவே அவரை என்னுடன் போட்டியிடும் எண்ணத்தை விட்டுவிட்டு அரசியலில் இருந்து விலகுமாறு மிகவும் அன்புடன் வேண்டுகோள் விடுக்கிறேன்.''

பெட்டிகலவத்தையில் ஸ்ரீலங்கா, லங்கா சமசமாஜ, பொதுவுடைமை, காலி ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்கள் ஆகியோரிடையே பேசுகையில் காலி மாநகரசபை அங்கத்தவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் காலி வேட்பாளருமான திரு. டபிள்யு. டி. எஸ் அபயகுணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் ''கலாநிதி தஹநாயக்கா எனது நல்ல நண்பர். தஹநாயக்கா பிரதமராக இருந்தபோதுகூட 1960ம் ஆண்டு என்னிடம் தோல்வியுற்றார், அப்போது காலி ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களே என்னை ஆதரித்தனர்.

ஆனால் வரும் தேர்தலில் கலாநிதி தஹநாயக்கா, ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராக நிற்கிறார். ஸ்ரீலங்கா, லங்கா சமசமாஜக்கட்சி, பொதுவுடைமைக் கட்சி. காலியிலுள்ள ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த பகுதியினர் யாவரும் என்னை ஆதரிக்கின்றனர். தஹநாயக்கா தமது விதியை விரைவில் அறிவார். அவர் தன் பேச்சில் 1966ம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பற்றித் தேர்தல் மேடைகளில் தஹநாயக்கா பேசியவற்றை நினைவுபடுத்தி இப்பொழுது ஐக்கியதேசியக்கட்சிக்கு மக்களை வாக்களிக்கும்படி கேட்பது வெட்கமாக இல்லையா எனக் கேட்டார்.

நான் எந்தக் கட்சியையும் வெறுக்காததினால் தான் இன்று எனக்குப் பல கட்சியினரும் ஆதரவு தருகின்றனர் முக்கூட்டணியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் வாக்களிப்புக் காலத்தில் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என அவர் தமது பேச்சின் முடிவில் கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள் பி. எஸ். அபயசேகரா (ஸ்ரீலங்கா), என். வி. எவ். நாகரத்ன (ஐ. தே. க.), ஏ. சி. எம். இஸ்மாயில் (ஐ தே. க.), வெய்ஸ்செல் யுனேட் ஆகியோரும் பேசினர்.

மே27-க்குப்பின்

# என்.எம். வயோதிபசாலைக்கு கொண்டு செல்லப்படுவார்'

— கொத்தலாவலை

எட்டியாந்தோட்டை, புதன்

''கலாநிதி டாக்டர் என். எம். பெரேரா, திரு டட்லி சேனநாயக்காவின் காலில் விழுந்து அவரிடம் சிறிது இரக்கம் பெருவிட்டால் நிச்சயமாக அவர் மே 27க்குப் பின் வயோதிபர் இல்லத்திற்குக் கொண்டுசெல்லப்படுவார்'' என எட்டியாந்தோட்டை ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு ஜோர்ஜ் கொத்தலாவலை தமது வேட்பு மனுவை சமர்ப்பித்த பின்பு [illegible] யாந்தோட்டை நகரில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கொத்தலாவலையாக வரவேற்கவில்லை. திரு. டட்லி சேனநாயக்காவின் பிரதிநிதியாகவே வரவேற்கின்றனர்.

தேசிய அரசாங்கத்தால் பல பாடசாலைகள், ஆய்வு கூடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டும் எட்டியாந்தோட்டையிலிருந்து ஒரு என்ஜினியரோ டாக்டரோ உருவாக்கப்படவில்லை. வரும் தேர்தலில் கலாநிதி என். எம். பெரேரா தோல்வியடைவார்.

என். எம். பெரேர ஆட்சிமன்றத்தில் இருக்கவேண்டுமென்று சிலர் விவாதிக்கிறார்கள். தவறான சொற்களிலிருந்து அவரைக் [illegible]

# ''சிங்களவருடன் இணைந்தே உரிமைகள் பெறமுடியும்'

— த. கா. வேட்பாளர்

அல்லைப்பிட்டி, புதன்

''தமிழ் மக்கள் இந்நாட்டில் பூரணஉரிமை பெற்று வாழவேண்டுமானால் சிங்கள சமூகத்தவருடன் இணைய வேண்டும். இதைவிட்டு அவர்களை எதிர்ப்பதன் மூலம் உரிமைகள் ஒரு சிலவற்றையாவது பெறமுடியாதென்பதைச் சமபகால அரசியல்வரலாறு கூறுகின்றது'' என வேலணை அம்மன் கோவிலடியில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளர் திரு. நா. த. சிவஞானம் பேசுகையில் குறிப்பிட்டார் திரு செ நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு சிவஞானம்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கடந்த பதினைந்த வருடகாலமாக தமிழ்ப்பேசும் மக்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்திருக்கின்றார்கள் இவர்களது துயரைத் துடைப்பதற்காக தமிழ்மக்களால் தெரிவு செய்து அனுப்பப்பட்ட தமிழ்மக்களின் பெரிய கட்சியாகிய தமிழரசுக்கட்சியினர் மந்திரிபதவி கிடைத்ததும் சகலதையும் மறந்து சிங்கள மக்களுக்கு அடிமையானார்கள். எமது கட்சியினரும் ஐக்கிய தேசியக்கட்சியினருடன் சேர்ந்தனர். ஆனல் கடைசிவரை அவர்களுக்கு விசுவாசமாக இருந்து அரசாங்கம் நடாத்தஒத்துழைத்தோம். ஆனல் தமிழரசுக் கட்சியினரோ இடை நடுவில் அவர்களை முறித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். இப்படிப்பட்டவர்களை சிங்களவர்கள் மதிக்கமாட்டார்கள். எதிர்வரும்பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினரே அரசாங்கத்தை அமைப்பார்கள். அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றால் எமது கட்சியினரை ஒருமித்து ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள்.''

ஆட்சிமன்றத்துக்கு

# 'மக்கள் என்னை மேசன் வேலைக்கு அனுப்பவில்லை''

— என். எம்.

எட்டியாந்தோட்டை, புதன்

'எட்டியாந்தோட்டை மக்கள், ஏழைகளுக்குச் சேவை செய்வதற்காகஎன்னை ஆட்சிமன்றத்திற்கு அனுப்பினர்கள். கடந்த 30 வருடங்களாக அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக பாடுபட்டு வருபவன் நான் ஒருவனே'' என ல. ச. ச. கட்சியின் தலைவரும், எட்டியாந்தோட்டை கூட்டணி வேட்பாளருமான கலாநிதி என். எம். பெரேரா, எட்டியாந்தோட்டை நகரில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினர்.

ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. ஜோர்ஜ் கொத்தலாவலையின் போட்டியைக் குறிப்பிட்ட அவர், எட்டியாந்தோட்டையில் ஐந்தாவது முறையும் வெற்றியடைவதற்காகவேதான் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த 30 வருடங்களாக வீதிக்குக் கீழ் பாலங்கள் கூடப் போடப்படவில்லை என்றுவிவாதிப்பதைக் குறிப்பிட்டு என். எம். பெரேரா பேசுகையில், இப்படியான வேலையைச் செய்யும் மேசனல்ல நான் மக்கள், என்னை அடக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்காகப் போராடும்படி ஆட்சிமன்றம் அனுப்பினர்களே தவிர இதற்காக அல்ல. தனது தொகுதியில் ஒரு என்ஜினியரோ, டாக்டரோ உருவாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை குறிப்பிட்ட அவர் தன் கோறளையில் கல்விக்கு வேண்டிய மறுமலர்ச்சியைக் கொடுத்துங்கூட ஒருவரும் இப்பரீட்சைகளில் தேறவில்லை என்றார்.

வருகின்ற பொதுத் தேர்தலில் ஐ. தே கட்சி தோற்கடிக்கப்படும் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் உண்மையான சோஷலிஸ அரசாங்கத்தை தெரிவுசெய்வதற்குப் பொது மக்கள் காத்திருக்கின்றனர் என்று தனது பேச்சின் இறுதியில் குறிப்பிட்டார்.

## வாக்குச் சீட்டுக்கள் தயார் செய்யப்படுகின்றன

கோட்டை, வியாழன்

எதிர்வரும் பொதுத் தேர்


ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

# ஹரிச்சந்திரா

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த

# திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 78-வது தினம்

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி.ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த

# தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்

# நம் நாடு

(ஈஸ்ட்மென் கலர்


குமாரசாமி விஜேதன் உடுவில் டச்சு ரோட்டில் தமது காரியாலயம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசு கழகம் கோரியவர்கள் எந்த முகத்தோடு கிழக்குமாகாணத் தமிழர்முகத்தில் விழிப்பார்கள். அதனுல்தான் அவர்கள் அங்கு போட்டியிடவில்லை.

தமது வேட்பு மனுவைச சமர்ப்பித்த பின்பு எட்டியாந்தோட்டை நகரில் கூட்டக்களிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''மக்கள் என்னை ...

யாவரும் ஐக்கிய முன்னணிக்கே தங்கள் ஆதவையளிக்கிருர்கள். இதனுல் கிழக்கு மாகாணத்திலுள்ள பல ஸ்தானங்கள் ஐக்கிய முன்னணிக்கே கிடைக்கும்

ஐக்கிய முன்னணியின் பிரமாண்டமான கண்டிக் கூட்டம் பற்றி பத்திரிகைகளும் சரியான செய்திகளை பிரசுரிக்கவில்லையெனக் குறிப்பிட்டார்.

கலாநிதி என்.எம்.பெரேரா தோல்வியடைவார்.

என்.எம்.பெரேரா ஆட்சிமன்றத்தில் இருக்கவேண்டுமென்று சிலர் விவாதிக்கிருர்கள். தவருன சொற்களிலிருந்து அவரைக் காப்பதற்கு, அவரை ஆட்சிமன்றத்திற்கு அனுப்பக்கூடாது தொழிலாளருடைய 21 அம்சக் கோரிக்கையை புறக்கணித்த இவரால் எப்படி இரண்டு கொத்து அரிசி, மலிவாகத் துணிகள், 20 சதத்துக்கு உடுலைக் கிழங்கு ஆகியவற்றைக் கொடுக்கமுடியும்.

ஐக்கிய முன்னணியின் ...

வீதிக்குக் கீழ் பாலங்கள் கூடப் போடப்படவில்லை என்றுவிவாதிப்பதைக் குறிப்பிட்டு, என். எம். பெரேரா பேசுகையில், இப்...யான

பொய்ப் பிரசாரத்தால் மக்கள் ஏமாறமாட்டார்கள்'' எனக் கூறிய அவர் இறுதியில் கடந்த காலத்தில் தான் ஏதாவது தவறுசெய்திருந்தால் அதை மன்னிக்குமாறும், இருண்ட அந்தக் காலப்பகுதியை மறப்பதற்குத் துணைசெய்யுமாறும் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

# சட்டம் பாரபட்சமானது ஏன்?

— சிறிமா

மொறட்டுவா,புதன்

'கடந்த ஞாயிற்றுக் கிழமை போகம்பரையில் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் கூட்டத்தின் போது ஐ.தே.கட்சியின் ஊர்வலமொன்றைப் பொலிசார் அனுமதித்துள்ளனர். இதற்கு முன்னர் நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் கூட்டத்துக்கு ஊர்வலங்கள் அனுமதிக்கப்படவில்லை. ஒரு சட்டம் அரசாங்கத்துக்கு ஒருவிதமாகவும் ஐக்கிய முன்னணிக்கு இன்னொரு விதமாகவும் செயல்படுவது ஏன் என எனக்கு விளங்கவில்லை'.

மொறட்டுவாவில் அத்தொகுதி வேட்பாளர் திரு விமலசிறி டிமெல்லை ஆதரித்து நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் உரையாற்றுகையில் ஐக்கிய முன்னணித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்கிருர்கள் என்பது இன்று வெளிப்படையாகத் தெரிகிறது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கியமுன்னணி 100 ஸ்தானங்களை நிச்சயமாகப் பெறும். முஸ்லிம்கள் ...பிட்டார்.

# தயார் செய்யப்படுகின்றன

கோட்டை; வியாழன் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு 55 லட்சம் வாக்குச் சீட்டுக்களைத் தயாரிக்கும் பணியில் அரசாங்க அச்சகப் பகுதி மும்முரமாக ஈடுபட்டுள்ளது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அச்சடிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. மே 20ந் திகதிக்கு முன்னர் இவை அச்சடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 17-ம் திகதி [30-4-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- மனக் கவலைகளுக்கு இடமளிக்கும். கடமையில் தடை ஏற்படும். மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வீர்கள். மதுபானத்தை தவிர்க்கவும்.

**ரிஷபம்**- கலைஞர்கள் போற்றப்படுவர். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிடைக்கலாம். குருவின் ஆசி தாராளமாகக் கிடைக்கலாம்.

**மிதுனம்**- நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். பேச்சுவன்மையின் மூலம் பொதுத்துறையில் புகழ்அடைவீர்கள்.

**கடகம்**- நம்பிக்கை மோசடி நடக்கும். வியாபாரத் துறையில் நஷ்டமேற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். சிலருக்கு வாதரோகம் தென்படக்கூடும். உணவுவிடயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும்.

**சிம்மம்**- கன்னல்போல் இனிக்கும் வாழ்க்கை. காதலில் வெற்றி உண்டு. பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும். இல்லறத்தில் இணைப்புகள் இறுகும். வெளியிடத் தொடர்புகளும் திருப்திகரமாக இருக்கும். இன்று சுப தினம்

**கன்னி**- எதிர்பாராதமுனையில் இருந்து ஆபத்து உருவாகும். உள்வீட்டிலேயே சிறியபூசல்கள் தோன்றக்கூடும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தெய்வவழிபாடு விரும்பத்தக்கது.

**துலாம்**- தேனுன சம்பவங்கள் நடைபெறும். தேடியது கிடைக்கும் காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான தினம். முதியோர்கள் வாழ்க்கையில் இளமை நினைவுகள் நிழலாட்டம்போடும்

**விருட்சிகம்**- வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**தனுசு**- எதிர்பாராத விளைவுகள் மூலம் செலவினங்கள் அதிகமாகும் சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடும் பணிக்கு இடம்கொடாது இருக்கவும்.

**மகரம்**- குடும்ப கவலையுடன் குறுக்குவழித்தலையீடும் தென்படும் உங்களைப் பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள். அதிக ஆபத்துக்கு இடம் அளிக்கும்.

**கும்பம்**- குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். முன்னேற்றப்பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிகள் நடைபெறும். உணர்ச்சிவசப்படாதிருத்தல் வேண்டும்.

**மீனம்**- தனத்துடன் வாழ்வு இன்று தவருது கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு. நீண்டநாள் கடன் நிவர்த்தியாகும். வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி
நடித்த
வல்லவனுக்கு வல்லவன்

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
எம். ஜி. ஆர். நடித்த
தாய் மகளுக்கு கட்டிய தாலி

## MANOHARA

JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
Stanley Baker, James Booth
in
ROBBERY
[Eastman Color]

## REGAL JAFFNA

Daily
4-45, 7 & 9-45 p.m.
Peter Falk, Britt Ekland
in
TOO MANY THIEVES



அறவே களைகளை அழிக்குமென நிருபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும். நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம். சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள், ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, ... பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, அளவு செய்ய முடியாத போத்தலில் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?



# சேர்கோப்பூர் 36%

களைகளைக் கொல்கிறது!

BAYER

உற்பத்தியாளர்:
பேயர்
லீவர்கூசன்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டன்ஸ் வீதி, கொழும்பு 10

மேற்காஸிய நிலைமை

# பாரபட்சமற்ற ஐ. நா. விசாரணைக்கு இஸ்ரேல் தடைபோடுகின்றது

## இலங்கை பிரதிநிதி கண்டனம்

கெய்ரோ ஏப்,29

மேற்காஸியாவில் ஐ. நா. விசாரணைக் குழுவினர் மேற்கொண்டுள்ள ஆய்வுகளுக்கு இஸ்ரேல் தடை போடுவதாக இக்குழுவின் தலைவரும் ஐ. நா. வில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக இருப்பவருமான திரு. ஷேர்லி அமரசிங்க குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் திரு. ஷேர்லி அமரசிங்கா பேசினார்

விசாரணைக்குழுவினர் பாரபட்சமற்றமுறையில் விசாரணைகளைச் செய்துவருகிறார்கள் என்றுகூறிய அமரசிங்க விசாரணைக்குழுவினர் டெல் அவிவில் விசாரணைகளை நடத்துவதற்கு இஸ்ரேல் அனுமதி மறுத்துவிட்டது என்பதையும் தெரிவித்தார்.

இஸ்ரேலியர் கைப்பற்றி வைத்துள்ள பிரதேசங்களில் அரபுக்கள் கொடுமைப் படுத்தப்படுவதுபற்றிசுமார் 40 பேர் குழுவின் முன் சாட்சியமளித்தார்கள்.

டெல் அவிவில் இஸ்ரேலியர்கள் விசாரிக்கப்படுவதற்கு இஸ்ரேல் அரசு அனுமதி மறுத்து விட்டதால் ஜெனிவாவில் இரண்டு இஸ்ரேலியர்களின் சாட்சியங்களைப் பதிவதற்காக குழுவினர் அங்குபோகவிருக்கிறார்கள்.

### பலத்த தாக்குதல்

நேற்று சூயஸ் கால்வாயின் கரையோரப்பகுதியில் 62 மைல் சுற்றுவட்டத்தில் ஐக்கிய அரபுக்குடியரசு படையினர் இஸ்ரேலிய நிலைகள் மீது குண்டுமாரி பொழிந்து கடுமையான தாக்குதல்களை நடத்தினார்கள். 1967 ம் ஆண்டுக்குப் பிறகு இப்பகுதியில் எகிப்தியர் மேற்கொண்ட மிகப் பெரியதாக்குதல்இதுவாகும் என்று கருதப்படுகின்றது.

இஸ்ரேலியர் நிலைகள் மீது தாக்குதல் மேற்கொண்ட எகிப்திய விமானங்களை வழிமறித்த இஸ்ரேலிய விமானங்களில் ஒரு மிராஜ் ஜெட்விமானத்தை எகிப்தியர் சுட்டு வீழ்த்தியதாகவும் அறிவித்தனர். தங்கள் விமானங்கள் யாவும் பத்திரமாகத் திரும்பி வந்து விட்டதாகவும் எகிப்தியர் கூறினார்கள். ஆனால் எகிப்தியரின் இருவிமானங்களைத் தங்கள் படையினர் சுட்டுத் தள்ளிவிட்டதாக இஸ்ரேலியர் அறிவித்திருக்கிறார்கள்.

---

கம்போடிய நிலைமை

# இந்தோனேஷிய யோசனைக்கு செஞ்சீனாகடும் எதிர்ப்பு

ஹாங்காங், ஏப். 29

கம்போடியாபற்றி- குறிப்பாக இந்தோசீன நிலைமைகள் பற்றி ஆராய ஆசிய நாடுகளின் கூட்டமொன்றை கூட்டுவதற்கு இந்தோனேஷியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை சீனாவும் கண்டித்திருக்கின்றது. இந்த ஏற்பாட்டை ஏற்கனவே வடவியட்னும் கண்டித்திருக்கின்றது. இந்தோசீனாவில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை மூடிமறைப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என்று சீனா குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

கம்போடியா வில் இப் பொழுது ஏற்பட்டுள்ள அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அந்நாட்டுமக்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளை எப் பொழுதுமே சீனா ஆதரித்து வரும் என்றும் சீனா அறிவித்துள்ளது.

இதற்கிடையில் கம்போடியாவுக்கு தென்வியட்னுமிலிருந்து ஏராளமான ஆயுதங்கள் விமானத்தில் ஏடுத்துச் சொல்லப்படுவதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்கா இன்னும் கம்போடியாவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதுபற்றிமுடிவு செய்யவில்லையென்று தெரிகின்றது.

---

## 'வேண்டாத பிள்ளைப்பேறு சமூகத்தின் சாபக்கேடு'

அமெரிக்க டாக்டர் கருத்து

---

## ஆத்மீக ஈடேற்றமே நோக்கம்

யாழ்ப்பாணம், புதன்

சமரச நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பஹாய் இயக்கத்தின் குறிக்கோள் ஆத்மீக ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதுதான். இதில் எவரும் சேர்ந்து பணியாற்றலாம்.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நேற்று நடந்த பஹாய்இயக்கத்தின் 9-வது வருடாந்த மகாநாட்டில் திரு. இ. எம். சண்முகநாதன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கே. இராஜரத்தினம் தலைமையில் நடந்த இம் மகாநாட்டில் மலேசியாவிலிருந்து வந்திருந்த திரு. வாசுதேவன் ஆத்மீக ஈடேற்றத்திற்கான வழிவகைகள் பற்றி விளக்கிக் கூறினார்.

இம்மகாநாட்டிற்கு உலகின் பல பாகங்களிலுமிருந்தும் பிரதிநிதிகள் சந்தித்தனர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு. பீட்டர் திருமதி யோன் பீட்டர் ஈரான் நாட்டைச் சேர்ந்த செல்வி மார்த்தாரூட், செரிபியானி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

இரகசிய வாக்களிப்பின் போது கீழ் காணுவோர் அகில இலங்கை பஹாய் தேசிய ஆத்மீக சபையின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் சி. எம். சண்முகநாதன், வி. கதிரவேலு, கே. டி. ஜி. இரத்தினம் ஜோசப் வேதமாணிக்கம், பி. பி. சலாய், கே. இராஜரத்தினம், கே. சுவர்ண் ராஜா. ஏ. வீரபாகு கே. சிவப்பிரகாசம். ......

### 'பதவிக்கு வரும்'

கொலன்னவை, புதன்

'எதிர் வரும் பொதுத் [illegible]லிலும் தேசிய அர[illegible]மே நிச்சயமாக வெற்றி[illegible]றும். ஆட்சிமன்றத்தின் அடுத்த 5 வருடங்களிலும் நன்மையடைய விரும்புபவர்கள் [illegible] [illegible] அரசாங்கத்தின் [illegible]றைய அங்கத்தவர்களுக்

---

பொலிஸ்

## பாரபட்சமின்றி செயலாற்ற வேண்டும்

கேகாலை, புதன்

'அரசாங்கத்தினால் எந்த விதமான அநீதியான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டாலும் பொலிஸ் அதுபற்றிக் கவனிக்காது இந்த தேர்தல் வேளையில் பட்சபாதமற்ற தங்கள் சேவையை மக்களுக்கும் இதர கட்சிகளுக்கும் அளிக்க வேண்டும்.'

கேகாலை பஸ்நிலையத்துக் கருகாமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கேகாலைத்தொகுத் வேட்பாளர் திரு. கலுகல்லை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் 1965-ம் ஆண்டு தாம் கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைத் தானும் தேசிய அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் நிறைவேற்றினார்களா? அவர்களின் ஏமாற்றுவித்தையை மக்கள் இன்றுநன்குணர்ந்துள்ளார்கள் கேகாலை மாவட்டத்திலுள்ள 8ஸ்தானங்களும் ஐக்கிய முன்னணிக்குகேயன்றி ஐக்கிய தேசியக்கட்சிக்கல்ல எனக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய எட்டியாந் தோட்டை வேட்பாளர் டாக்டர் என் எம். பெரேரா- 'தேசிய அரசாங்கத்தின் தவறான செயல்களால் மக்கள் இன்று பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். முதலாளித்துவ வர்கத்தினரின் ஆலோசனையின்படி செயலாற்றும் இந்த அரசாங்கம் கடந்த 5 வருடகாலப் பகுதியில் மக்களுக்கு இன்னல்களையே விளைவித்துள்ளது. சோஷலிச அரசாங்கத்தை நாம் நிறுவவேண்டுமானால் சகல அரசாங்க ஊழியர்களும் பட்சபாதமின்றி நடந்து கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

திரு. தனபாலவீரசேகரா, திரு. தர்மசிறிசேனநாயக்கா திரு. ஆனந்த சிறிசே[illegible] உட்படப் பலர் இக் கூ[illegible]தில் உரையாற்றினர்.

---

பூநகரி

## பயிர்ச்செய்கைக் குழுக்களின் சமாஜம்

பூநகரி, புதன்

பூநகரிப் பகுதியிலுள்ள 22 பயிர்ச்செய்கைக்குழுக்களின் சமாஜப் பொதுக்கூட்டமும் தேர்தலும் பூநகரி கி. ச. மண்டபத்தில் பூநகரிப்பகுதி கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. கே. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. 22 ப. செ. குழுக் காரியதரிசிகளும் சமாஜப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். தேர்தலின் போது-செல்லியாதீவு ப. செ. குழுவைச்சேர்ந்த திரு வைவல்லிபுரம் (கிராமசபைத்

---

பூட்டானில் விபத்து

# இந்திய ஜனாதிபதி கிரி மயிரிழையில் உயிர்தப்பினர்

## பத்திரிகை நிருபர் பலி

டிம்பு, ஏப்.29

இந்திய ஜனாதிபதி திரு வி.வி. கிரியும் பூட்டான் மன்னரும் நேற்று மயிரிழையில் உயிர்தப்பினார்கள். மலையிலிருந்து கற்பாறையொண்டு உருண்டு வந்து வீழுந்தபோது ஏற்பட்ட பொழுதே இவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினார்கள்.

ஜனாதிபதி கிரியின் பூட்டான் விஜயம் பற்றிய செய்திகளை எடுப்பதற்காக வந்திருந்த இந்திய பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டார். வேறொரு பத்திரிகையாளர் காயங்களுக்குள்ளானார். சமாச்சார் பத்திரிகா என்ற இந்தியப் பத்திரிகையின் நிருபரான பக்த ஷர்மா என்பவரே விபத்தில் பலியானவர். நிருபர்கள் பிரயாணம் செய்த ஜீப் வண்டியின் மீது கற்பாறை உருண்டு விழுந்தது. ஸ்தலத்திலேயே மரணமான நிருபரின் சடலம் புதுடில்லிக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. காயமடைந்த ஆகாசவாணி நிருபரும் புதுடில்லிக்குத் திரும்பியிருக்கிறார். ஜனாதிபதியின் விசேஷ விமானத்தில் சடலம் புதுடில்லிக்குக் கொண்டுவரப் பட்டது.



காலநிலை மோசமாகவிருப்பதால் ஜனாதிபதி தமது சிக்கிம் விஜயத்தை ரத்து செய்துள்ளார்.

---

"தற்போதய அரசியல்சாசனம் இருக்கும்வரை

## தமிழருக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது"

வல்வெட்டித்துறை, புதன்

"தமிழகத்தில் 1938-ம் ஆண்டுதொடக்கம் வட ஏகாதிபத்தியவாதிகள் பல தடவைகளில் இந்தியைப் புகுத்த முற்பட்ட சமயங்களில் எல்லாம் பெரியார், அண்ணா போன்ற தலைவர்கள் அவற்றை எதிர்த்து அவ்வப்போது தடுத்து வந்தனர். இதன் காரணமாகத் தான் தமிழகத்தில் தமிழர் ஆட்சி நடைபெற்றுவருகிறது. ஆனால் இலங்கையில் 1956-ம் ஆண்டு சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தமிழ்த்தலைவர்கள் எதிர்த்தார்கள். கடைசியில் தோல்விதான் ஏற்பட்டது. இங்குள்ள தலைவர்களின் ஆங்கிலமோகமே மொழிப் போராட்டம் வெற்றிபெறத் தவறியதன் காரணமாகும்" என இ. தி. மு. க. முன்னைநாள் செயலாளர் திரு. ஆ. இளஞ்செழியன் தொண்டமானாறு கடற்கரை மைதானத்தில் இம்முறை இ. தி மு. க வின் சார்பில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடும் திரு. ஆ. விசாகரத்தினத்தை ஆதரித்துப்பேசுகையில் கூறினார்.

திரு. ஏ. பொன்னுச்சாமி தலைமையில் அண்ணா அரங்கில் கூட்டம் நடைபெற்றது.

'நம் கட்சி ஆட்சிமன்றத்தில் என்றோஒருநாள்இருந்து தமிழ் மக்களின் நன்மைக்காக உழைத்து வெற்றியும் காணும் என்பது நமது திடமான நம்பிக்கையாகும்" என இளஞ்செழியன் குறிப்பிட்டார்,

திரு. ஆ. விசாகரத்தினம் பேசுகையில், தமிழ்மக்களில் பெரும்பான்மையினர் அரசியலைப்பற்றி சிந்திப்பது குறைவென்றும், அவர்கள் நன்கு சிந்தித்திருப்பார்களேயானால் தமிழினத்திற்கு இக் கட்டான நிலை வந்திருக்க முடியாதென்றும், 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தபோது அந்நேரத்தில்தமிழருக்கென ஒரு நல்ல தலைவர் இல்லாத காரணத்தால் பிரித்தானிய ஆட்சியாளர்ஒருசாசனத்தைஇலங்கையரிடம் வரையறுத்துக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள் என்றும், அந்த சாசனத்தின்படிதான் தமிழராகிய நாம் நமக்கப்பட்டுவருகிறோம் என்றும், அந்தச் சாசனம் இருக்கும்வரை சமஅந்தஸ்தோ, சமஷ்டி ஆட்சியோ, சுயாட்சியோ பெற முடியாதென்றும் சொன்னார். "இப்போதுள்ள சாசனத்தைஅழித்துஒப்புரவுள்ள சோஷலிசசமுதாயம்ஒன்றை அமைக்க முற்படுவோம்" என அவர் கூறினார்.

உ. நெடுமாறன், திராவிடமணி, வன்னியூர் தயாபரன் ஆகியோரும் பேசினர்

---

பஸ் நிலையத்தில்

## நாய்கள் தொல்லை

புத்தூர், புதன்

அச்சுவேலி பஸ் நிலையத்தில் நாய்களின் தொல்லை பொறுக்கமுடியாததால் பிரயாணிகள் பெரும்கஷ்டம் அனுபவிக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. குட்டைபிடித்தநாய்களும், சொறிநாய்களும், இரவும் பகலும் இப் பஸ்நிலையத்தை முற்றுகையிட்டவண்ணமே இருக்கின்றன. அண்மையில் மேற்படி பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காக காத்துநின்ற பிரயாணி ஒருவரை நாயொன்று கடித்ததால் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். சம்பந்தப்பட்டவர்களிடம் இது பற்றிமுறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதது குறித்து பிரயாணிகள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

---

## மகாவலித்திட்டம் பற்றி கருத்தரங்கு

கோட்டை வியாழன்

மகாவலித்திட்டம் பற்

---

# சி[illegible]-டீக். இரட்டை சவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வேண்டாத பிள்ளைப்பேறு சமூகத்தின் சாபக்கேடு'

## அமெரிக்க டாக்டர் கருத்து

வாஷிங்டன், ஏப். 29

''கருத்தடை மாத்திரைகளால் பாதிக்கப்படுவதாகக் கூறப்படும் பெண்களின் எண்ணிக்கையைவிட, அடுத்தடுத்து ஏற்படும் பிரசவங்களின்போது உண்டாகும் சிக்கல்களுக்கு பலியாகும் பெண்களின் தொகை பதினைந்துமடங்கு அதிகமாகும்.''

இவ்வாறு அமெரிக்காவில் செல்வாக்கு மிக்க குடும்பத்திட்ட நிறுவனமான சர்வதேச திட்டமிட்ட பெற்றோர் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் அவன் ஜி. கூமேஷர் குறிப்பிட்டுள்ளார்.

''வேண்டாத பிள்ளைப் பேறு எந்த ஒருசமூகத்திலும் ஒரு பாரதூரமான சமூக, வைத்தியத்துறை சீர்குலைவாகவோ சாபக்கேடாகவோ கருதப்படுகிறது. இந்தத் தீங்கிலிருந்து பெண்களைப் பாதுகாக்கப் பயன்படும் முதன்மையான சாதனம் கருத்தடை மாத்திரைகளே எனவே மாத்திரைகளைப் பற்றிய அர்த்தமில்லாத அநாவசிய பீதிகளைக் கிளப்புவது, அதி பயங்கரமான ஒரு நிலைமையை சமூகத்தில் ஏற்படுத்துவதாகவே அமையும்.''

இவ்வாறு டாக்டர் கூமேஷர் எச்சரித்துள்ளார்.

பெற்றது. 22 ப.செ.குழுக் காரியதரிசிகளும் சமாஜப் பிரதிநிதிகளும் க[illegible]ந்து கொண்டனர். தேர்தலின் போது-செல்வி[illegible] ப செ குழுவைச்சேர்[illegible] திரு வைவல்லிபுரம் ([illegible]ராமசபைத் தலைவர்) தலைவராகவும் மடுவில் நாடு ப செ குழுவைச் சேர்ந்த திரு பி தில்லைநாதன் செயலாளராகவும் தம்பிராய் ப செ குழுவைச்சேர்ந்த திரு பொ தங்கராசா பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

சாங்கமே நிச்சயமாக வெற்றிபெறும். ஆட்சிமன்றத்தின் அடுத்த 5 வருடங்களிலும் நன்மையடைய விரும்புபவர்கள் எனக்கும் தேசிய அரசாங்கத்தின் மற்றைய அங்கத்தவர்களுக்கும் உங்கள் வாங்குகளை அளியுங்கள்.'

கொலன்னாவைத் தொகுதி மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரான திருமதி குசுமா குணவர்த்தன அத்தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஆனந்த சிறிசேன உட்படப் பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

றது.

'நம் கட்சி ஆட்சிமன்றத்தில் என்றேனு ஒருநாள் இருந்து

மணி, வன்னியூர் தயாபரன் ஆகியோரும் பேசி.[illegible]ர்

தும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

# புதிய தலைமை யொன்று இந்நாட்டில ஏற்பட வேண்டும்

## கம்யூனிஸ்ட் வேட்பாளர் விருப்பம்

மாவிட்டபுரம், புதன்

''கம்யூனிஸ்டுகளை இன்று தமிழ்த் தலைவர்கள் 'சிங்களக் கட்சி' என்கிறார்கள். சிங்கள பிற்போக்குவாதிகள் தமிழ்க்கட்சி என்று கூறுகிறார்கள்.

இதற்கு முக்கிய காரணம் எமது கட்சியின் சிறப்பான கொள்கைகளே' இதனை பொது மக்கள் உணர்ந்து வருகின்றனர்''

இவ்வாறு கட்டுவன் சந்திக்கடுகாமையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி பொன்னம்பலம் கூறினார்.

திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நாம் கூட்டணியின் ஓர் அங்கமே மூன்று கட்சிகளும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்திருக்கிறோம். நாம் தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனம் உண்மையில் தமிழ் மக்களின் எதிர்கால விமோசனத்துக்கு அடிப்படையாக அமையும். பெரும்பான்மையினருடன் இணைந்தே எம் பிரச்னைகளுக்கு தீர்வுகாண வேண்டும். இதனை இன்றுள்ள தமிழ் கட்சிகள் இரண்டுமே உணர்ந்து வருவதாக தெரிகிறது. எனவே தேசிய ரீதியிலான ஒரு புதிய தலைமை இந்நாட்டில் முற்போக்கு எண்ணம்கொண்ட இளம் தலைமுறையினரால் ஏற்படுத்தப் படவேண்டும். இதற்கு இப்பொதுத் தேர்தலை தகுந்த சந்தர்ப்பமாகக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கம்யூனிஸ்ட் வென்றுவிட்டால் நாடு அழியும். கொடுமை பெருகும், மதம் அழியும் என்றெல்லாம் மாற்று கட்சியினர் கூச்சலிடுகின்றனர். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையிலே, சைவ ஆலயங்கள் நிறைந்த மதுரையிலே, பாடல்பெற்ற வரலாற்று நகரில் கடந்த 20 ஆண்டுகளாக கம்யூனிஸ்ட் பிரமுகர் தெரிவுசெய்யப்பட்டு வந்திருக்கின்றார். இதனால் என்ன ஆபத்து வந்துவிட்டது?

மற்றும் திரு. எம். சிதம்பரநாதன் (தெல். கி. ச. தலைவர்) திரு. எஸ். கார்த்திகேசு திரு. இராசா உட்படப் பலர் உரையாற்றினர்.

# 'நாட்டின் அபிவிருத்திக்கு ஐ.தே.கட்சியை ஆ[illegible]ரியுங்கள்'

அவிசாவளை, புதன்

தனது ஆதரவாளர்களுக்கு கூட்டணி ஆதரவாளர்கள் தரும் வேதனைகள், துன்பங்கள் போலஇல்லாமல் கௌரவமான முறையில் தேர்தல் பிரச்சாரத்தை தான் நடத்துவதாக அத்துஒுகாம கோறளை கிராமச்சபை மைதானத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் தெகியோவத்தை ஐ.தே கட்சி வேட்பாளர் திரு. எம். எஸ். தேமிஸ் கூறினார்.

தெகியோவத்தை முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு. கே. டி. பி. ஹன்சியஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தேமிஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பொதுமக்கள் ஐ.தே. கட்சிவேட்பாளருக்கு கொடுக்கும் ஆதரவு அவர்களின் நிறைவைக்காட்டுகிறது.

முன்னாள் கிராமச்சபைத் தலைவர் உட்பட பெரும்பான்மை இடதுசாரி ஆதரவாளர் ஐ.தே.கட்சியில் சேர்ந்திருப்பது கடந்த 30 வருடங்களாக செங்கோட்டையாக இருந்த தொகுதியில் ஐ.தே. கட்சியின் வெற்றியைக்காட்டுகிறது.

இத்தொகுதியில் பிரயாணஞ் செய்த பொழுது இத்தொகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினரால் எதுவிதமுன்னேற்றமும் இப்பகுதிக்குச் செய்யப் படவில்லை என்பதைக்கண்டதாகவும் ஆகவே பொது மக்கள் விரைவாக முன்னேறிவரும் தேசத்தின் அமைதிக்கும் தொகுதி அபிவிருத்திக்குமாக ஐ.தே.கட்சி அங்கத்தவரை தெரிவு செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

தெகியோவத்தை பட்டின சபையின் முன்னாள் துணைத்தலைவர் திரு எச் டி. கருணாரத்தின, திரு ரத்னசேகர உட்பட பலரும் இக் கூட்டத்தில் பேசினர்.

# சீன-பாக். இரட்டை சவாலை பாரதம் சமாளிக்குமாம்

## சுவர்ண்சிங் கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 2

சீன-பாகிஸ்தான் இரட்டை ஆபத்தைச் சமாளிக்கும் அளவுக்கு இந்திய ராணுவம் பலம்பெற்றிருக்கின்றது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சுவர்ண்சிங் கூறியிருக்கிறார்.

இந்தியா இன்னும் சில ஆண்டுகளில் செயற்கை கிரகங்களை விண்வெளிக்கு அனுப்பும் அளவுக்கு திறன் பெற்றிருக்கும் என்றும் திரு சுவர்ண்சிங் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செலவினங்கள் பற்றிய லோக சபை விவாதத்தில் திரு. சுவர்ண்சிங் விடையளித்துப்பேசினார்.

இந்தியராணுவம் மேலான பயிற்சிகளும் ஆயுத சாதனங்களும் பெற்றிருப்பதாகத் தெரிவித்த திரு. சுவர்ண்சிங் ராணுவத்தின் தாக்கும் சக்தியும் அதிகரித்துள்ளது என்றார்.

பாகிஸ்தானுக்கும் சீனாவுக்குமிடையில் இருந்துவரும் கூட்டுறவைப்பற்றி குறிப்பிட்டவர் இந்தியாவில் கிளர்ச்சிக்காரர்களுக்கு இந்த நாடுகள் எப்பொழுதுமே ஆதரவளித்துவந்துள்ளன வென்றும், ராணுவம் நாட்டைப் பாதுகாப்பதற்கு எப்பொழுதுமே தயாராய்இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாபாதுகாப்பு ஆயுத உற்பத்தியிலும் இறங்கியிருக்கின்றது. விரைவில் சிறிய அளவிலான தாங்கிகளை உற்பத்தி செய்வோம் என்று குறிப்பிட்ட திரு. சுவர்ண்சிங் வெளிநாடுகளிலிருந்தும் இந்தியாவுக்கு ஆயுதங்கள் கிடைத்துள்ளன வென்றும் பெரிய அளவில் சோவியத்யூனியனிடமிருந்து ஆயுத உதவி கிடைத்திருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

செயற்கைக்கிரகம் செலுத்தும்திட்டம் தயாராய் இருக்கின்றது என்றும் இன்னும் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கிடையில் இந்தியா தனது முதலாவது விண்வெளிக்கிரகத்தை செலுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் சீனா அண்மையில் செயற்கை கிரகம் ஒன்றை வெற்றிகரமாகச் செலுத்தியிருப்பது குறித்தும் அணுகுண்டு சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியிருப்பது பற்றியும் லோக்சபையில் அங்கத்தவர்கள் பலர் கிளப்பிய வினாக்களுக்கு திரு. சுவர்ண்சிங் விடையளித்துப்பேசினார்.



# நோயாளிகள் வாக்களிக்க வசதி

கோட்டை, புதன்

எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது தங்கள் வாக்குகளை அளிப்பதற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாக்களிப்பதற்காக இவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நோயாளிகள் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு சௌக்கிய சேவை அதிபர் திரு. கே. பாலசிங்கம் நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளினதும் வைத்திய சுப்பிரிண்டன்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## 5 கோடி 20 லட்சம் ரூபா வரிவசூல்

கோட்டை. வியாழன்

சுங்கப்பகுதி கடந்த ஜனவரி மாதத்தில்மட்டும் ஐந்து கோடியே இருபது லட்சம் ரூபாவினை வரியாகச் சம்பாதித்திருக்கிறது.

# இலங்கைப்பிரஜையாக முயற்சித்தவர் தற்கொலை

யாழ்ப்பாணம், வியா

இலங்கைப் பிரஜையாவதற்குத்விண்ணப்பம் செய்த ஒருவர் அதனை நிரூபிப்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் கழுத்தில்சுருக்கிட்டுத்தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் கலட்டியில் நடந்துள்ளது.

கலட்டியைச்சேர்ந்த மலாயன் பென்சனியரான அப்பாக்குட்டி சோமசுந்திரம் (வயது 60) என்பவரின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

மரணவிசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மனைவியான தெய்வநாயகி (வயது 47) கூறியதாவது: எனது கணவர் மலாயாவில் பொதுவேலைப்பகுதியில் கடமையாற்றியவர். இலங்கை பிரஜையாக விண்ணப்பம் செய்திருந்தார். இது சம்பந்தமாகசிலவிபரங்கள் கேட்டு கடிதம் வந்தது அது பற்றி அவர் பீதியடைந்திருந்தார். இரவு சாப்பிட்டுவிட்டு படுக்கைக்கு சென்றவர். அதிகாலையில், மாமரத்தில் சுருக்கிட்டு இறந்துகிடந்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விசாரணையின் பின் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்

# கருணாநிதிக்கு அறுவை சிகிச்சை

சென்னை, ஏப்ரல் 29

தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதிக்கு கண்ணில் ஏற்பட்டுள்ள நோயைக் குணப்படுத்துவதற்காக டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்தார்கள்.

நேற்று நடத்தப்பட்ட இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததாக டாக்டர்கள் அறிவித்தனர். முதல்வர் கருணாநிதியின் உடல்நிலையைக் கவனிப்பதற்கென டாக்டர்கள் குழு ஒன்றை தமிழ்நாடு மந்திரிசபை நியமித்திருக்கின்றது.

# ஹொலிவூட் நடிகை மரணம்

ஹொலிவூட், ஏப். 29

பிரசித்திபெற்ற ஹொலிவூட் சினிமா நடிகை அனிதாலூஸ்ஸி தமது 53-வது வயதில் சில தினங்களுக்குமுன் காலமானார்.

ஐந்து வயதில் நாடக மேடையில் நடிக்க ஆரம்பித்த இவர் தமது 13-வது வயதில் திரையுலகில் பிரவேசித்து இதுவரை 79 படங்களில் நடித்துள்ளார். இவரது படங்களில் 'மேரி அன்டோயினட்' மிகப் பிரபலமானது.

# மகாவலித்திட்டம பற்றி கருத்தரங்கு

கோட்டை வியாழன்

மகாவலித்திட்டம் பற்றிய கருத்தரங்கொன்றை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடராக நடத்தவிருக்கிறது. இத்திட்டம் சம்பந்தமாக எழுப்பப்பட்டிருக்கும் பிரச்னைகள் பற்றி இக்கருத்தரங்குகளில் ஆராயப்படும்.



# சூசையப்பர் தொழிலாளர் தினம்

யாழ்ப்பாணம், வியாழன்

புனித சூசையப்பர் தொழிலாளர் தினம் நாளை மானிப்பாயில் கொண்டாடப்படவிருக்கிறது. மானிப்பாய் அருணோதய அரங்கில் விழா இடம் பெறும்: பிற்பகல் 5 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து புனித சூசையப்பர் திருச்சுரூபம் பிரதானவீதி வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு புனித அன்னம்மாள் தேவாலயத்தை வந்தடைத்து திருப்பலி நடைபெறும். பின்ன[illegible] தொழிற்கருவிகள் ஒப்பு[illegible] கொடுத்தலுக்கும் ஆசி[illegible] வதித்தலுக்கும் காணிக்கை வேளையில் பவனியாக எடுத்துச் செல்லப்படும். தொடர்ந்து அருட் திரு எஸ். ஜே இம்மானுவல் தலைமையில் நடை பெறும் கூட்டத்தில் திருவாளர்கள் த. அரசலிங்கம், எம் யேசுரத்தினம், ஞா பூபால், எஸ் எவ் சவுந்தரம் ஆகியோர் உரையாற்றுவர். புனித அன்னம்மாள் பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் அருணோதய நாடக மன்றத்தாரின் நாடகமும் விழாவில் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எல்லா மக்களும் தாங்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால், உலகிலே நான்கு நண்பர்கள் கூடச் சேர்ந்திருக்கமாட்டார்கள்.

— பாஸ்கல்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 17-ந் திகதி ( 30-4-70)


## ஸ்ரீலஸ்ரீ இலக்கண சுவாமிகள்

ஈழத்திலே அவதரித்த மகான்களில் ஒருவரான இலக்கணசுவாமிகள் என்ற ஸ்ரீலஸ்ரீ முத்துகுமார தம்பிரான் சுவாமிகளின் குருபூசை இன்று. அவரது அருமைபெருமைகளை ஈழத்திலுள்ள சைவமக்களில் பலரும் அறியார். சிறுவயதிலேயே ஈழத்திலிருந்து தமிழகம் சென்றார். தமிழையும், சமஸ்கிருதத்தையும் சைவத்தையும் முறையே கற்றார். துறவு பூண்டு, பல சைவநூல்களையும் பதிப்பித்து தமிழகத்திலுள்ள ஆதீனங்களின் பெருமதிப்பைப் பெற்று, சிதம்பரத்திலே ஸ்ரீ நடேசப்பெருமானை தினசரி தரிசித்து, சைவத்துக்கும் தமிழுக்குமே தமது ஆவியும் உடலும், உடைமை எல்லாமும் அர்ப்பணித்து வாழ்ந்த தியாகமூர்த்தி அவர்.

அப் பெரியாருடைய சமாதி சிதம்பரத்தில் உள்ளது ஈழத்தையும் பாரத நாட்டையும் தமது வாழ்க்கையால் பிணைத்துள்ள இவர் ஒரு குடும்பத்துக்கு மட்டுமன்றி, இருநாடுகளிலுமுள்ள சைவ சமூகத்துக்கே அரும் செல்வமாவார். அவரது பெருமைகளை சில மாதங்களுக்கு முன் இங்கு வந்திருந்த அவரது சீடரான காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்கள் விளக்கி, 'ஈழநாட்'டிலே ஓர் அருமையான கட்டுரையை எழுதியிருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளின் வாழ்க்கையைப் பற்றி ஒரு விரிவான நூல் எழுதுவதாக அவர் தெரிவித்தார். இது சீக்கிரம் நிறைவேற வேண்டும்.

நமது பெரியார்களைப் போற்றுவதன் மூலம் நாம் நம்மையே உயர்த்திக்கொள்ளுகிறோம், சிதம்பரத்திலே உள்ள அவரது புனித சமாதி ஒரு நல்ல கோயிலாக அமைக்கப்பட வேண்டும். அவர் எதற்காக வாழ்ந்தாரோ அந்தப் பணிகள் மேன்மேலும் வளர்ந்து, இருநாடுகளுக்குமிடையே சைவநல்லுறவுகள் பலப்பட வேண்டும். இப் புனிதப் பணியிலே சிறப்பாக ஈழத்து சைவபரிபாலன சபையாரும், இந்துமா மன்றத்தாரும் கவனம் செலுத்தி, அப் பெரியாரின் குருபூசையை ஈழத்திலும் தமிழகத்திலும் நடத்துவதுடன் அவரது பணிகளை தொடர்ந்து நடத்தி மேன்மைகொள் சைவ நீதி மேலும் பரவ கூடியவகையில் ஆவனசெய்வதன் மூலம் ஈழத்து சைவசமூகத்துக்கு மேலான நன்மை செய்துகொண்டதாகும்.

## பாரிஸில் தமிழ் மகாநாடு

மூன்றுவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடும் கருத்தரங்கும் இம்முறை பாரிஸ் நகரிலே வருகிற ஜூலை மாதம் 15-ந் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நடப்பதாக அறிவிக்கப்படுகின்றது. தமிழ்ச்செல்வங்களை உலக மக்களுக்கு வாரிவழங்கும் நோக்கத்துடன் கூடிய இம்மகாநாட்டை தங்கள் நாட்டில் நடந்த பிராஞ்சு மக்கள் முன்வந்ததற்காக அவர்களுக்கு தமிழரின் விசேஷ நன்றி உரித்தாகும்.

களிலே இந்திய கலாசார விஷயங்களில் அக்கறை கொண்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு, தமிழின் வளர்ச்சிபற்றியும் இந்தியாவிலே அது பெற்றுள்ள இடத்தைக் குறித்தும் விளக்குவதுமே இம் மகாநாட்டின் முக்கிய நோக்கமென்று அறிவிக்கப்படுகின்றது. தமிழரில் பலருக்கே இக்காலத்தில் தங்கள் மொழியிலுள்ள செல்வங்கள் சரிவரத் தெரியாது.

தமிழிலுள்ள அரும் பெரும் செல்வங்கள்,

### ஆட்சி மன்றத்தில் சாதித்தது என்ன? (9)



# தமிழரசுக்கும்-சுயேச்சைக்கும் ஜி. ஜி.யின் பதில்கள்

**தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பேட்டியின் இரண்டாம் பகுதி இது. முதற்பகுதி நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்தது:-**

**நாளைய இதழில், சமஷ்டி அரசியலமைப்பு, தமிழ்மொழி விசேட விதிகளின் கீழான பிரமாணங்கள், தமிழர் உரிமைகளைப்பெற இரண்டரை ஆண்டுகள் அவகாசம் கேட்டமை; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழ்க் காங்கிரஸின் நிலைமை இவைபோன்ற பல விஷயங்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அளித்த பதில்களும், முஸ்லிம் வட்டாரத்துக்கும், யாழ்ப்பாணத் தொகுதிக்கும் அவர் பொதுவாகச்செய்த சேவைகள் பற்றிய விபரமும் வெளிவருகிறது.**

பேட்டி: ஜி. ஜி. பொன்னம்பலம்
(முன்னாள் யாழ்ப்பாண உறுப்பினர்)
நிருபர்: பெரி. சுந்தரலிங்கம்

திரு. குமார், குருநகரை அடுத்து, பாஷையூர், நாவாந்துறை, முஸ்லிம் வட்டாரம் என்றுவட்டாரரீதியாகவும், யாழ்ப்பாணத் தொகுதிக்குப் பொதுவாகவும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கடந்த ஐந்தாண்டுகளில் செய்த சேவைகளைத் துண்டுப்பிரசுரங்களின் துணையுடன் எடுத்துச் சொல்லி முடிந்தவுடன், 1948ல் நிறைவேற்றப்பட்ட இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச்சட்டம், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் சட்டம் ஆகியவற்றிற்கான வேறுபாடுகள்யும் பற்றியும், சமஷ்டி அரசியலமைப்புக் கோரிக்கைபற்றி பூர்வாங்கமாகச் சில கருத்துக்களைப் பறிமாறிக்கொண்டோம்.

எங்களது உந்தப் பேச்சில், 'குட்டிப் பொன்னம்பலம்' என்று பெயர் பெற்ற வழக்குரைஞர் திரு. சரவணமுத்துவும், சேர்ந்து கொண்டார். குமாரும், வழக்குரைஞர் சரவணமுத்துவும், ஒருவர்மாறி ஒருவராக, சமஷ்டி அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்படக் கூடிய தீங்குகள்; தமிழரசுக்கட்சிக்காரர்களின் கொள்கைக் குழப்பங்கள்; 1948ம் ஆண்டில் இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை திரு. பொன்னம்பலம் ஆதரித்ததற்கான நியாயங்கள்- என்று எடுத்துச் சொல்லி என்னைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்தார்கள்

ஜி. ஜி. வரமாட்டாரா? கேள்விகளைக் கேட்டு, பதில்களைப் பெற்றுக்கொண்டு பறந்துவிடலாமே என்று நான் ஏங்கிக் கொண்டிருந்தேன்; பசி வேறு ஒரு பக்கம் வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்தது. நேரமோ ஒன்றரை மணியைக் கடந்து விட்டது.

இந்த வேளையில் தான், திரு ஜி ஜி யின் 'ஜீப்' வரும் சத்தம் கேட்டு ஆவலோடு வாசலை நோக்கினேன். 'போர்டிக்கோ' வில் வந்து நின்ற ஜீப்பிலிருந்து திருமதி பொன்னம்பலம் முதலில் இறங்கி உள்ளே வந்தார்.

திருமதி பொன்னம்பலம், முழுத் தேர்தல் பிரசாரத்தையும், பின்னணியில் இரு

யைத் தரமுயர்த்த டாக்டர் நாகநாதன் எடுத்த முயற்சி தங்களின் தலையீட்டால் தடைபட்டிருப்பதாகவும், தாங்கள் அச்சுவேலியில்தான் சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி நிறுவப்படவேண்டும் என்று கூறியதாகவும், டாக்டர் நாகநாதன் எனக்களித்த பேட்டியில் கூறியிருக்கிறார் இது உண்மையா? ஏன் அப்படிச் செய்தீர்கள்?

ப: இது ஒரு பச்சைப் பொய். கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிக்குரிய இடம் மொத்தம் சுமார் 3 ஏக்கர்தான். புதிய சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிக்கென அச்சுவேலியில் மிக முக்கியமான இடத்தில் 5 ஏக்கர் காணிஉண்டு. அதனை மாவட்ட கல்வி அதிகாரியும் அரசாங்க அதிபரும் சேர்ந்தே தேர்ந்தெடுத்தனர்.

எனவேதான் [illegible] யைப் பயன்படுத்த[illegible] அங்[illegible] சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி கட்டப்பட

### நகரசபைத் தேர்தலில் அரசியல்கூடாது

ஒரு விஷயத்தை வடிவாகப் போடவேண்டும் சுந்தரலிங்கம் நகரசபை நடவடிக்கைகளில் அரசியல் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் கொஞ்சம்கூடச் சம்பந்தமேயில்லை. நகரசபையைப் பொறுத்தமட்டில் தெருக்கள், சந்தைகள், பொது இடங்கள், சாக்கடை, கால்வாய் இன்னோரன்ன இடங்களைச் சுத்தமாக வைத்திருப்பது, தண்ணீர் வசதி, மின்சாரவசதி போன்ற குடிமக்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பது போன்றவைதான் முக்கியமான வேலைகள். இதிலே அரசியலுக்கு எங்கே இடமிருக்கிறது?

நகரசபைத் தேர்தலிலே அரசியலே இடம்பெறக

கூடாது என்பதுதான் என் கொள்கை.

கே: அப்படி ய[illegible]ல் தமிழ்காங்கிரஸ் சா[illegible]

வாக இருந்தவர் என்று குற்றம் சாட்டுகிறவர்களுக்கு நீங்கள்என்னபதில் கூறுவீர்கள்?

### தமிழ்ப்பகுதிகளில் சிங்களவர்

ப: இது ஒரு படுமோசமான, கேவலமான, அடிப்படையற்ற குற்றச்சாட்டு தமிழ்ப்பகுதிகளில் சிங்களவர்களின் குடியேற்றத்துக்கு நான் எப்படிப்பொறுப்பாக இருக்க முடியும்?

நான் 1948க்கும்'52 க்கும் இடைப்பட்ட காலத்தில் தான் கைத்தொழில் அமைச்சராக இருந்தேன் என்பது உமக்குத் தெரியும். இந்த இடைப்பட்ட காலத்தில் எனக்குத் தெரிந்தது. இன்னும் சொல்லப்போனல் என்னுடைய அனுமதி பெற்று 60அல்லது 70 சிங்களக் குடும்பங்கள்தான்-சரியான தொகை எனக்கு இப்போது நினைவில்லை. குடியேற்றப்பட்டது. இந்தக்குடும்பங்களும்கூட இங்கினியாக் கலைக்குளம் கட்டப்பட்டதால் அந்தப் பிரதேசத்திலிருந்து குடியேற்றப்பட்டவர்களே. காலஞ்சென்ற சேனநாயகா என்னிடம் இவர்களைக் குடியமர்த்துவதற்கு அனுமதி கேட்டபோது, அது நியாயமானதாகத் தான் பட்டது.

### 1956க்குப்பின்

ஆனல் 1956க்குப்பின், தமிழரசுக கட்சியினர் பெரும்பான்மையாக ஆட்சிமன்றத்திற்குச் சென்றபின் தான் கிழககு மாகாணத்தில் சரிபாதிககு மேல் சிங்களகக குடியேற்றம் நடைபெற்றிருககிறது.

இதைவிட, இன்னுமோர் முக்கியமான விஷயம். இவர்கள் பெரிதாகப் பேசும் பண்டாரநாயகா- செல்வநாயகம் ஒப்பந்தத்திலும், கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றக் கொள்கை ரீதியாக எழுத்திலே ஒப்புக் கொண்டு விட்டனர் சமஷ்டிக் கட்சியினர். அந்த ஒப்பந்தத்திலே ஏதோ அந்த இடங்களின் தன்மை மாறிவிடாமல் குடியேற்றப் படவேண்டும் என்று ஒரு விதியைப்புகுத்தி

### இன்று அப்பரடிகள் குருபூசை.

# திருத்தொண்டின் நெறிவாழப் பிறந்தவர்

(செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி)

சைவ சாதனைகள் நான்கினுள் தாசமார்க்கத்தில் நின்று இறைவனை அடைந்தவர் அப்பர் சுவாமிகள். 'திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ்வரு ஞானத் தவ முனிவர்' எனச் சேக்கிழார் பெருமான் சிறப்பிக்கின்றார். சித்திரைச் சதயம் அப்பரடிகள் இறைவனுடைய திருவடியை அடைந்த தினமாகும். 'வைப்பாய் நின் திருவடிக் கீழோர் தலைமறைவு' எனப்பாடி இறைவனின் திருவடியின்பத்திற்குத் தவங்கிடந்த பெருமான் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' எனப் பாடிப் பாடித் திருவடிப் பேற்றையடைந்தார்.

இடையறாத பேரன்பும் கண்ணீர் மழை பொழியும் இரு கண்களும் உளவாரந் தாங்கிய திருக்கரமும் சிவபெருமான் திருவடியிலே பதிந்த நெஞ்சும் நீங்காத பெருந்துறவும். ஞானப் பாடல் நிறைந்த செவ்வாயும் சைவவேடமும் பொலிய விளங்கியவர் அவர். திருஞானசம்பந்தர் பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இவர் சைவராகப் பிறந்து சமணத்தில் பல காலம் இருந்து மீண்டும் சைவத்திற்குத் திரும்பிப் பல தொண்டுகள் செய்தவர். இவ்வாறு பல தலங்களுக்கும் சென்று வழிபட்டுத் தொண்டாற்றி வரும் சமயத்திலேதான்சிறுபிள்ளையாகிய சம்பந்தர் இவரைச் சந்தித்தார்: சந்தித்த பொழுதே 'அப்பரே' என்று அழைத்து வழிபட்டார். சைவவேடத்தோடு கூடிய முதுமையை நோக்கியே இவ்வாறு அழைத்தார்போலும்.

கடுந்துக்கம் வந்தநிலையில் சிலசமயம் அறிவேமறைந்து விடுகின்றது. இதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகளும் விதிவிலக்காகாக அகப்பட்டுக் கொண்டார். நிலையாமை உணர்ச்சி மீதூர சமணத்தில் சேர்ந்தார். அதற்கும் இறைவனுடைய அருளின்மையே காரணம் என்பதை சேக்கிழார் காட்டுகின்றார்.

'நல்லாறு தெரிந்துணர
நம்பர் அருளாமையினல்
கொல்லாமை
மறைந்துறையும்
சமண்சமயம் குறுகினர்'

சூலைநோய்தான் மருள் நீக்கியாரைத் திருநாவுக்க

புனிதன் பொற்கழலீச
னென்னுங் கனி
இனிது சாலவு
மேசற்றவர்கட்கே'

எனப்பாடி சமுதாயத்தையும் மக்கட் கூட்டத்தையும் நல்வழிப் படுத்தினர். இவரது பாவன்மையை நோக்கியே இறைவன் 'நாவுக்கரசெனும் நாமம்' மன்னுக என வாழ்த்தினர். 'சொற்குறுதிக் கப்பரெனச் சொல்' என்ற முதுமொழியும் உணர்தற்குரியதே.

அடிகள் நமக்குத்தந்த ஓர் உறுதிமொழியைக் கவனிப்போம்.

அல்லலாக ஐம்பூதங்க
ளாட்டினும்
வல்லவாறு சிவாயநம
வென்று
நல்லம் மேவிய நாதனடி
தொழ
வெல்ல வந்த வினைப்பகை
வீடுமே

துன்பங்கள் உண்டாகும்படியாக ஐம்பெரும்பூதங்கள் ஆட்டினலும் திருநல்லத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை வல்லவாறு 'சிவாய நம' என்று தொழுதால் வெல்லவேண்டுமென்று நெருங்கி வந்த வினைகள் யாவும் தொலைந்துவிடும், எனவே ஐம்பூதங்களால் தொல்லைவரும்போது அவற்றுக்கு மேம்பட்டு நிற்கும் இறைவன் ஒருவனுற்றான் நீக்கமுடியும். நீக்குவதற்குபாயம் பஞ்சாட்சர பாராயணமேயாகும் என்ற உண்மையை எம் மனத்தில் பதிய வைத்தார்.

சிக்கல் சூழ்ந்து நாட்டு மக்கள் இருளிலே மயங்கிக் கிடந்த காலத்திலே தோன்றியவரானபடியால் மக்களின் உள்ளங்களைத்தொடக்கூடியதாகவே பாடியுள்ளார்.

"நடலை வாழ்வு கொண்
டென் செய்தீர்நாணிலீர்
சுடலை சேர்வது சொற்
பிராமாணமே
கடலின்நஞ்சமுதுண்டவர்
கைவிடாவ்
உடலினர் கிடந்தார் முனி
பண்டமே"

இப்படியாகப்பல இடங்களில் யாக்கையை இழிவுபடுத்தி மக்களை மயக்கத்தினின்று விழிக்கவைத்த பெருமை அவருக்குண்டு

அப்பர் சுவாமிகளைப்பற்றி நினைவுகூரும்போது அவர்களைச் சைவத்துக்கே ஆக்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு வாரிவழங்கும் நோக்கத்துடன் கூடிய இம்மகாட்டை தங்கள் நாட்டில் நடந்த பிராஞ்சு மக்கள் முன்வந்ததற்காக அவர்களுக்கு தமிழரின் விசேஷ நன்றி உரித்தாகும்.

தமிழரின் பெருமையைப் பற்றி தமிழரே பேசவதைவிட, மற்றவர்கள் அதை ஆராய்ந்து, பயன் பெறுவதே அதிக விசேஷம். அந்த முறையில் பார்த்தால், பரிஸில் இம்முறை நடக்கும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் தமிழர் அதிகமாகக்கலந்து கொள்ளமுடியாது போயினும், இம்மகாநாடு தமிழரின் புகழை மேலும் உயர்த்துமென்றே கொள்ளலாம்.

சிலகுறிப்பிட்ட தலைப்புகளுடன் கூடிய ஆராய்ச்சிக் கட்டுரைகளே மகாநாட்டில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமாம். மேற்கத்திய நாடு நோக்கமென்று அறிவிக்கப்படுகின்றது. தமிழரில் பலருக்கே இக்காலத்தில் தங்கள் மொழியிலுள்ள செல்வங்கள் சரிவரத் தெரியாது.

தமிழிலுள்ள அரும் பெரும் செல்வங்கள், பல பல சமய இலக்கியங்களிலும் அடங்கியுள்ளதாலும், அவை தமிழர் உள்ளிட்டு உலகமக்களனைவருக்கும் பயன்படுமாதலாலும் அவற்றை சமய நூல்கள் என்று ஒதுக்கி விடுவது எவ்வகையிலும் சரியாகாது. பாரிஸ் மகாநாட்டிலே அவை ஓரளாவது இடம்பெற முடியுமாயின் அது அம்மகாநாட்டின் முக்கியத்தையும் பயனையும் அதிகரிக்கச் செய்யும். இம்மகாநாடு பூரண வெற்றி பெற தமிழர் கூடுமான ஒத்துழைப்பும் உதவியும் அளிக்கக்கடமைப்பட்டுள்ளனர்.

## தமிழரசுக்கும் . .

[6-ம் கலத் தொடர்ச்சி]

ரணம் பெற்றுக்கொடுத்து உதவியுள்ளார்.

சிறுகுவலைகள் களவாடப் படுவதைத் தடுப்பதற்கென இயந்திர வள்ளமொன்றைப் பாஷையூர் மக்களுக்கு அரசாங்கம் வழங்கவேண்டுமென வாதாடி அதனைப் பெற்றுக்கொடுத்தார்.

கடற்றொழில் புரிகின்ற மக்களை குடியேற்றும் நோக்குடன் றெக்கிளமேஷன் திடலிலிருந்து பாஷையூர் துறைமுகம் வரையிலுள்ள கடலை நிரப்பி, குடியிருப்பதற்கேற்ற காணியாக மாற்றியமைப்பதற்கு வழிவகுத்துத் தந்துள்ளார். (இதற்கான வேலைகள் முதற்பிரிவு நடைபெற்று வருகின்றன.)

### மரண அறிவித்தல்

**திருமதி சின்னச்சிப்பிள்ளை அப்புக்குட்டி**

காலம்சென்ற காசிநாதர் அப்புக்குட்டியின் மனைவியும் பவளரத்தினத்தின் தாயாரும் டாக்டர் தம்பிப்பிள்ளையின் மாமியாரும், கனகராசா, பத்மா, செல்வராசா, துரைரத்தினம் ஆகியோரின் பேத்தியாரும் திருமதி இரத்தினநாயகத்தின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 30-ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உறவினரும், சிநேகிதரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். உடும்பராய் தெற்கு

2086

### புனித அந்தோனியார் பாடசாலை

1969ம் ஆண்டு மேற்படி பாடசாலையில் 7ம் வகுப்புக்கு கீழான வகுப்புகளை மட்டுமே நடாத்துவதென தீர்மானிக்கப்பட்ட போது இத்தரக் குறைப்பை எதிர்த்து முன்பியங்கியபடியே பாடசாலையில் எல்லா வகுப்புகளையும் நடைபெறுவதற்கு ஆவனசெய்தார். மேலும் இப்பாடசாலையின் பராமரிப்பு வேலைகளுக்கெனவும் பண உதவி பெற்றுக் கொடுத்துள்ளார்.

### நாவாந்துறை வட்டாரத்துக்கு

நாவாந்துறை வட்டார மக்களுக்கு ஜி ஜி கடந்த ஐந்தாண்டு காலத்தில் செய்த சேவைகளில் சில வருமாறு:

நாவாந்துறை மக்களுக்கென தனியான வீடமைப்புத்திட்டம் அமைத்திருக்கிறார். இதன்மூலம் குறைந்தது 60 குடும்பங்கள் பயன்பெற வழிபிறந்துள்ளது.

பூநகரி, கரியாலை நாகபடுவான் ஆகிய இடங்களில் நாவாந்துறையைச் சேர்ந்த 40 குடும்பங்கள் குடியேற வழி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 ஏக்கர் நெற்காணியும், 2 ஏக்கர், வீடு கட்டவும், பெரும் பயிர்ச் செய்கைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்னுமோர் வீட்டுத் திட்ட ஆரம்ப வேலையாக சிவன்கோவில் காணியில் ஒரு ஏக்கர் நிலத்தை நாவாந்துறை மக்களுக்கு கொடுப்பதற்கும் ஜி. ஜி. ஒழுங்குசெய்துள்ளார்.

[தொடரும்]

வாசலை நோக்கினேன். 'போர்டிக்கோ' வில் வந்து நின்ற ஜீப்பிலிருந்து திருமதி பொன்னம்பலம் முதலில் இறங்கி உள்ளே வந்தார்.

திருமதி பொன்னம்பலம், முழுத் தேர்தல் பிரசாரத்தையும், பின்னணியில் இருந்தபடியே சிறப்பாக இயக்கிக் கொண்டிருப்பவர்; ஜி ஜியைப் பத்திரிகைக்காரர்கள் காணமுடியாதிருக்கும் வேளைகளில் திருமதி பொன்னம்பலம்தான் தேவையான தகவல்களைப் பெற உதவி செய்பவர். 'வரும் பொழுது கடுகடுப்பாகத்தான் வந்தார்'.

தலையில் தொப்பி கையில் வோக்கிங் ஸ்டிக், நீட்ட கால் சட்டை. மேலே ஒரு பெனியன். இந்தக் கோலத்தில் தான் வந்தார் ஜி. ஜி. நான் பேட்டிக்கு வந்திருக்கும் விஷயத்தை திரு. சரவணமுத்துவும், குமாரும் சொல்ல 'ஓம், ஓம் பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன் சுந்தரலிங்கம்' என்று சொல்லி விட்டு உள்ளே சென்றவர், தாகத்திற்கு குளிர்பானம் அருந்திவிட்டு, திரும்பி வந்து என்னருகில் அமர்ந்திருந்தார்.

'பாரும், பெனியனோடு தான் எங்கேயெல்லாம் கன்வசிங் போய்விட்டு வருகிறேன். சரியான களைப்பாக இருக்கிறது' என்று யாரோ டிரைவர் இவருடைய மேற்சட்டையிருந்த பையுடன் காரை வேறு எங்கோ செலுத்திக்கொண்டுசென்று விட்டதாகக் கடுகடுப்புடன் கூறிவிட்டு கேள்விகள் என்ன? என்று என்னை நோக்கினார்.

'நீங்கள் தொகுதிக்குச் செய்த சேவைகளைப் பற்றியெல்லாம் நான் ஏற்கெனவே சொல்லி, தேவையான தகவல்களை எல்லாம் கொடுத்து விட்டேன்; உங்களிடம் குறிப்பிட்ட சில கேள்விகளை மட்டும் கேட்க விரும்புகிறார்' என்று குமார் என் சார்பில் விளக்கினார்.

'றைட், றைட்' எதோ கேட்பதைச் சீக்கிரமாகக் கேளுங்கள். உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டு இளைப்பாறப் போகிறேன் என்று மிக மிகக் களைத்தவராகி சொன்னார் ஜி ஜி. பொன்னம்பலம்.

கேள்விகளை ஆரம்பித்தேன் நான்.

### நாகநாதனின் குற்றச்சாட்டு சரியா?

கே: நல்லூர்த் தொகுதியிலுள்ள கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி

(முன்னாள் யாழ்ப்பாண உறுப்பினர்)

நிருபர்: **பெரி. சுந்தரலிங்கம்**

எனவேதான் அந்தக்காணியைப் பயன்படுத்தவேண்டும் அங்கே சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி கட்டப்பட வேண்டும் என்று வற்புறுத்தினேன். அது என்னுடைய தொகுதிக்கு உட்பட்டவிஷயமுமல்ல. நான் தனிப்பட்ட முறையில் எந்த நன்மைக்காகவும்செய்யவில்லை தமிழ் மக்களின் நன்மையைக் கருதியே அச்சுவேலியிலுள்ள இடத்தை வீணுக்காது காக்க நடவடிக்கை எடுத்தேன்.

### தமிழ் மக்களின் நன்மைக்காகவே

கட்சி நன்மைக்காக நான் இதைச் செய்ததாகச் சொல்வது சுத்தஅபாண்டம். டாக்டர் நாகநாதன் சொல்கின்றபடி செய்தால் தமிழ் மக்களுக்குச் சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியும் கிடைக்காது. கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியினால் தக்க நன்மையும் கிடைக்காது; இரண்டும் கெட்டான் நிலைதான் ஏற்படும்.

### மேயர் தேர்தலும் தமிழ்க்காங்கிரசும்

கே: 'யாழ் நகர மேயர் தேர்தலில் தமிழரசுக் கட்சியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் ஒன்று சேர்ந்தார்களே அப்படியானால் பல்கலைக் கழகவிஷயத்திலும், பொதுத் தேர்தலிலும் ஏன் இரண்டு கட்சிகளும் ஒன்று சேரக் கூடாது?' என்று உங்களுடன் போட்டியிடும் திரு அல்பிரட் துரையப்பா பேசியிருக்கிறார். இதற்கு நீங்கள் அளிக்கும் பதில் என்ன?

ப: துரையப்பாவுக்கு பதிலளிப்பதை நான் என் கௌரவத்துக்கு குறைவான விஷயமாகத்தான் கருதுகிறேன். ஆனால் நீர் கேட்டதற்காகப் பதில் சொல்கிறேன். இந்த விஷயத்தைக் கிளப்பியதும் நல்லதுதான், ஏதோ பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்து விட்டதுபோல் கண்ட இடங்களில்எல்லாம் பேசித் திரிவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத்தான் வேண்டும்.

முதன் முதலாக தமிழரசுக் கட்சியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் ஒன்று சேருவது பற்றிய பிரச்னையே இல்லை. தமிழ்க்காங்கிரஸ்உறுப்பினர்கள் குறிப்பிட்ட ஒரு நபரை அதரிப்பதற்குத்தான் நான் ஒப்புதல் அளித்தேன்.

கூடாது என்பதுதான் என் கொள்கை.

கே: அப்படியானால் தமிழ்காங்கிரஸ் சார்பில் ஏன் வேட்பாளர்களை நிறுத்தினீர்கள்! கட்சி ரீதியாக ஏன் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டீர்கள்?

ப நகர சபைத் தேர்தலிலும் கட்சியை புகுத்தி, முதன்முதலில் கட்சி ரீதியாகப் போட்டியிட்டவர்கள் தமிழரசுககட்சியினரே அதற்கப்புறம் கடைசியில் வேறுவழியின்றி தமிழ்ககாங்கிரசும் கட்சி ரீதியில் வேட்பாளர்களை நிறுத்தவேண்டியேற்பட்டது.

அரசியல் கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம் தேசிய ரீதியில் ஆட்சிமன்றத்திற்காக நடைபெறும் பொதுத் தேர்தலில்தான் இடம்பெறுகிறது.

### ஊழல் இல்லாத தூயநிர்வாகம்

இதனால்தான் தமிழரசுக கட்சிகு யாழ். நகர சபையில் இரண்டோ, நான்கோ அங்கத்தவர்களே இருந்தபோதும் அவர்களுடன் ஒத்துழைத்தோம், நகர சபையில் ஊழல்களின்றி, தூயநிர்வாகம்நடைபெறவேண்டும், அதற்குப் பொருத்தமான ஆளைத் தேர்ந்தெடுககவேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்க காங்கிரஸ், தமிழரசுக கட்சியினருடன் அந்நேரத்தில் ஒத்துழைத்தது.

மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கும், அரசியற்கொள்கைகளுக்கும் என்ன சம்பந்தமோ எனத்குத் தெரியாது; அதற்கும் இதற்கும் ஒரு விதமான தொடர்பும் இல்லை. ஊழல்களில்லாத தூய நகரசபை நிர்வாகம் தேவை என்ற அடிப்படையில் வேலைசெய்தபோது, எந்த அரசியற் கொள்கையையும் தியாகம் செய்து விட்டதாகவோ விட்டுக கொடுத்ததாகவோ சொல்ல முடியாது.

(-மிகவும் களைத்துப் போய் காணப்பட்ட ஜி. ஜி. இந்தக் கேள்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பதிலளித்தார். 'ஊழல் இல்லாத தூய நகரசபை நிர்வாகம் நடக்க வேண்டும்' என்பதுதான் அன்றைய சூழ்நிலையில் மிக மிக முககியமானதாக இருந்தது என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்தினார்.)

கே: தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேறுவதற்குத் தாங்கள் தான் காரணகர்த்தா

திலே ஒப்புக் கொண்டு விட்டனர் சமஷ்டிக் கட்சியினர். அந்த ஒப்பந்தத்திலே ஏதோ அந்த இடங்களின் தன்மை மாறிவிடாமல் குடியேற்றப் படவேண்டும் என்றொரு விதியைப்புகுத்தியிருக்கிறார்கள் தான். ஆனால் 49 சத விகிதம் வரைக்கும் சிங்களவர்களைக் குடியேற்ற தமிழரசுக்கட்சியினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

(நாளைய ஈழநாட்டில் வேறும் சில கேள்விகளுக்கு திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அளித்த பதில்கள் வெளிவரும்)

### பாஷையூர் மக்களுக்கு செய்த சேவைகள்

கடந்த ஐந்தாண்டுகளில் திரு. ஜி. ஜி பொன்னம்பலம், யாழ்ப்பாணத் தொகுதில் பாஷையூர், நாவாந்துறை வட்டார மக்களுக்குச் செய்த சேவைகள் என்ன என்று திரு. குமார் பொன்னம்பலம் கூறிய தகவல்கள் வருமாறு:

**விளையாட்டு மைதானம்**

சிறந்ததோர் விளையாட்டு மைதானம் இல்லாக் குறையைக் கருத்திற்கொண்டு விளையாட்டு அமைச்சிடம் இருந்து ரூபா 10,000 பெற்றுத்தந்து மைதானத்திற்கான ஆக்கவேலைகள் நடைபெறச்செய்தார்.

கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் காட்டுத் திணைக்கள அலுவலகத்தை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொடுத்துப் பிரசவ விடுதி ஒன்றை அமைப்பதற்கு வழிவகை செய்துள்ளார்.

**வீடமைப்புத்திட்டம்**

கடற்றொழில் புரிகின்ற மக்கள் குடியிருப்பதற்கென காட்டுத் திணைக்கள அலுவலகத்திற்குப் பின்புறமுள்ள காணியை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுத்தது. 48 ஆயிரம் ரூபா விலை மதிப்புள்ள ஒன்றேகால் ஏக்கர் நிலத்தை 6 ஆயிரம் ரூபாவாக அரசாங்கத்திடம் பெற்று மக்கள் குடியிருப்பதற்குப் பகிர்ந்தளித்துள்ளார்.

பாஷையூர்ச் சந்திக்கு அணித்தாய் கடற்கரைவீதியில் உப அஞ்சல் அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்க ஒழுங் செய்துள்ளார். கூடிய கெதியில் இது திறக்கப்படும்

**புயல் நிவாரணம்**

1968ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழையினாலும் கடும் காற்றினாலும் பாஷையூர் கடற்றொழிலாளருக்கு ஏற்பட்ட தொழில் நட்டங்களுக்கு அரசாங்கத்திடமிருந்துநிவா

(1-ம் கலம் பார்க்க)

'நல்லாறு தொந்துணர நம்பர் அருளாமையினால் கொல்லாமை

மறைந்துறையும் சமணசமயம் குறுகினார்'

சூலைநோய்தான் மருள் நீக்கியாரைத் திருநாவுக்கரசு சுவாமிகளாக்கியது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

அடிகளின் கொள்கைகள் சமுதாயத்தால் மிகவரவேற்கக் கூடியன. ஏழாவது நூற்றாண்டில் தமிழோடு இசை பாடிச் சைவத்தை வளர்த்தார். அவர் காட்டிய உறுதியும், மாவீரமும், உள்ளத் திண்மையும் அக்காலச் சூழ்நிலையில் மிகவும் தேவையாக இருந்தன.

'நாமார்க்கும் குடியல்லேம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலை இல்லோம்' என்று முழங்கி நாட்டை ஆளும் வேந்தனது ஆணைக்கு வீட்டு நெறிக்கானான அடியார்கள் பணிய மாட்டார்கள் என்பதைக் காட்டியருளினார் இதனாலேயே சேக்கிழார் பெருமானும் நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியவர்க்கு என்று செம்மாந்து பாடினார். இவருடைய சைவக் கோலத்தைச் சேக்கிழார் படம் பிடித்துக் காட்டுகிறார்-

தூயவெண்ணீறு துறைந்த
பொன்மேனியும்
தாள்வடமும்
நாயகன் சேவடி தை வரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்புநீர்
பொழி கண்ணும் பவளச்
செஞ்சொல்
மேய செவ்வாயும்
உடையார் புகுந்தனர்
வீதியிலே

அடிகளின் கோலம் பழமையானது. எனினும் கொள்கைகள் புரட்சிகரமானவை.

ஆவுரித்துத் தின்றுழலும் புலைஞரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார் கன்பராகில் அவர்கண்டீர்நாம் வணங்கும் கடவுளாரே என்ற தேவாரத்தை நோக்கும் போது அடிகளாருடைய பொதுநோக்கும் சமயநோக்கும் புலப்படுகிறது. சமண பௌத்த மதங்கள் பரவியிருந்த காலத்தில் அதனை எதிர்த்துப் போராடி பண்ணையும் இசையையும் வளர்த்தவர் அவர். பெண்மைக்குப் பெருமை கொடுத்துப்பாடி 'காதல் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்' எனப் போற்றினார். கையிலே உழவாரங் கொண்டு ஆலய முன்றில்கள் தோறும் புல்லுச் செதுக்கிச் சிரமதானம் செய்தார்.

'மனிதர்காள் இங்கே வம் மென்று சொல்லுவேன் கனிதந்தாற் கனியுண்ணவும் வல்லிரே

... ஊட்டி மக்களை மயக்கத்தினின்று விழிக்கவைத்த பெருமை அவருக்குண்டு.

அப்பர்சுவாமிகளைப்பற்றி நினைவுகூரும்போது அவர்களைச் சைவத்துக்கே ஆக்கித்தந்த திலகவதியாரை நாம் மறக்கமுடியாது. அம்மையார் தம்பியாருளராகவேண்டுமென வைத்த தயவினாற்றான் அம் பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி வாழ்ந்தார், அவருடைய அன்பு நிலைக்கு வெற்றிகிட்டியது, மருணீக்கியாரைச் சமய குரவாராக்கிய பெருமை திலகவதியாருடையது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

நாயனார் அருளிய நான்காம் ஐந்தாம் ஆறும் திருமுறைகள் சைவத்திருநெறிக்கு உய்நெறிகாட்டுவன, சிறப்பாகத்தாண்டகம் அருளித் தந்தபடியால்தாண்டக வேந்து என்று அழைக்கப்பட்டார். திருவருள் வழி நின்றுதிருத்தொண்டுபுரிந்து திரு முறைகளையருளி, சிவநெறியைப் பரப்பிய அப்பரடிகளை இன்று நினைவுகூர்ந்து உய்வடைவோமாக.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம் 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இலைஞர் கண்டுபிடிப்பு.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 புல்லாங்குழல், 7-45 சிறுகதை- கனக. செந்திநாதன், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org